بسم اللہ الرحمن الرحیم نحمدہٗ ونصلی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 6

இதழ் 11 & 12

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

04-11 ஷஃபான் 1442 ஹிஜ்ரி கமரி 18-25 அமான் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக்
18-25 மார்ச் 2021


## அல்லாஹ்வின் கட்டளை

فَاَمَّا الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ فَيُوَفِّيْهِمْ اُجُوْرَهُمْ وَيَزِيْدُهُمْ مِّنْ فَضْلِهٖ

பின்னர் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்தவர்களுக்கு அவர்களின் நற்பலன்களை முழுமையாக வழங்குவதுடன் அவன் தனது அருளிலிருந்து அவர்களுக்கு மிகுதியாக வழங்குவான்.

(4:174)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## அரபி மொழியை கற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால் அரபிக் கல்வியின்றி திருக்குர்ஆனின் இன்பம் கிடைப்பதில்லை

**தவ்பா மற்றும் பாவ மன்னிப்பு கோருவதில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது மனிதனுக்கு கடமையாகும். தீமைகளில் வரம்பு மீறி விடக்கூடாது. மேலும் இறைவனின் கோபத்தை ஈர்ப்பவராக ஆகிவிடக்கூடாது என்பதையும் மனிதன் உற்று நோக்கி வர வேண்டும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

நான் உங்களிடம் மெய்யாகவே கூறுகின்றேன். தாய், தந்தைக்குரிய உரிமையை வழங்காதவர் ஒருபோதும் நன்மை மற்றும் அருளின் முகத்தை காண முடியாது. எனவே நல்லெண்ணத்துடன் முழுமையாக கட்டுப்பட்டு மற்றும் நன்றி விசுவாசத்துடன் இறைவன் மற்றும் அவனது தூதரின் கூற்றின்படி செயல்படுவதற்கு தயாராகி விடுங்கள். அதிலேயே நன்மை உள்ளது. இல்லையென்றால் உங்கள் விருப்பம். எமது பணி அறிவுரை செய்வது மட்டுமேயாகும்.

நான் எனது ஜமாஅத்திற்கு இந்த அறிவுரையையும் செய்ய விரும்புகின்றேன். அவர்கள் அரபி மொழியை கற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அரபி கல்வியின்றி திருக்குர்ஆனில் இன்பம் கிடைக்காது. எனவே மொழியாக்கத்தை கற்பது அவசியமாகும். மேலும் கொஞ்சம் கொஞ்சமாக அரபி மொழியை கற்பதற்கு முயற்சி செய்வதும் உகந்ததாகும். இன்றைய நாட்களில் அரபி மொழியை கற்பதற்கு மிக எளிதான வழிமுறைகள் வந்துள்ளன. திருக்குர்ஆனை ஓத வேண்டும். அது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். அவ்வாறிருக்கும்போது அரபி மொழியை கற்பதற்கு முயற்சி செய்யாமல் இருப்பதன் பொருள் என்னவாக இருக்க முடியும். முழு வாழ்நாளையும் ஆங்கிலம் மற்றும் இதர மொழியை கற்பதற்கு மனிதன் செலவழிக்கின்றான். இந்த விஷயத்தையும் நினைவில் கொள்ளுங்கள். தற்போதைய அரசாங்கம் ஒரு சமுதாய அரசாங்க வடிவில் மாறி விட்டது. எனவே இந்த சமுதாய அரசாங்கத்தின் மொழியும் கூட ஒரு சமுதாய வடிவை கொண்டதாக உள்ளது. எனவே தங்களது நோக்கத்தையும் விருப்பத்தையும் ஆட்சியாளர்களுக்கு தெளிவுபடுத்திக் கொடுப்பதற்கு ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் அதன் மூலம் உங்களால் அரசாங்கத்திற்கு நன்மை பயக்க முடியும்.

விண்ணில் தீர்ப்பு வழங்கப்படாத வரை எந்தத் துன்பமும் வந்தடைவதில்லை. நபிமார்களுக்கும் கூட துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. என்றாலும் கூட அது அன்பின் வடிவில் ஏற்பட்டவையாகும். அதில் ஒரு வகையான படிப்பினை மறைவாக இருக்கின்றது. தூய்மையான நபிமார்களின் கூட்டம் அந்த கஷ்டங்களில் தனது செயல் நிலை மற்றும் நடைமுறையின் மூலமாக மற்றவர்களுக்கு பாடம் கற்பிக்கின்றனர். சில மக்கள் மீது துன்பத்தின் வேதனை வருகின்றது. அது அவர்களின் செயல்களின் விளைவாகவே அமைகின்றது.

مَنْ يَّعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ شَرًّا يَّرَهٗ

தவ்பா மற்றும் பாவ மன்னிப்பு கோருவதில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது மனிதனுக்கு கடமையாகும். தீமைகளில் வரம்பு மீறி விடக்கூடாது. மேலும் இறைவனின் கோபத்தை ஈர்ப்பவராக ஆகிவிடக்கூடாது என்பதையும் மனிதன் உற்று நோக்கி வர வேண்டும். இறைவன் ஒருவர் மீது அருளின் பார்வையை வீசும்போது பொதுவாக உள்ளங்களில் அவன் மீதான நேசத்தை ஏற்படுத்தி விடுகின்றான். ஆனால் மனிதன் தீமையில் வரம்பு மீறி விடுகின்றபோது விண்ணில் அவருக்கு எதிராக எதிர்ப்பின் எண்ணம் ஏற்பட்ட உடனேயே இறைவனின் விருப்பத்திற்கேற்ப மக்களின் உள்ளங்கள் கடினமாகி விடுகின்றன. ஆயினும் தவ்பா மற்றும் இஸ்திஃபார் செய்தவாறு இறைவனின் சமூகத்தில் வீழ்ந்து பாதுகாப்பு தேடும் போது உள்ளுக்குள்ளேயே ஒரு கருணை தோன்றி விடுகின்றது. அவனது நேசத்தின் விதை மக்களின் உள்ளங்களில் விதைக்கப்பட்டு விட்டது என்பது எவருக்கும் தெரிவதில்லை. சுருக்கமாக, தவ்பா மற்றும் இஸ்திஃபார் எப்படிப்பட்ட அனுபவம் வாய்ந்த மருந்து என்றால் அது வீணாகுவதில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 270–272 – 2018 ஆண்டு காதியான் பதிப்பு)

ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பில் இல்லை. மேலும் ஆசியாவே! நீயும் பாதுகாப்பில் இல்லை. தீவுகளில் வாழ்பவர்களே! எந்தவொரு செயற்கை இறைவனும் உங்களுக்கு உதவி செய்ய மாட்டான். நான் நகரங்கள் வீழ்வதைக் காண்கிறேன். மேலும் குடியிருப்புகள் நாசமாகி விட்டதைக் காண்கிறேன். அந்த ஏக இறைவன் ஒரு காலம் வரை மவுனமாக இருந்தான். அவனது கண்களுக்கு முன்னால் வெறுக்கத்தக்க செயல்கள் செய்யப்பட்டன. அவன் அமைதியாக இருந்தான். ஆனால் இப்போது அவன் அச்சுறுத்தலுடன் தனது முகத்தைக் காட்டுவான். அந்தக் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை கேட்கக்கூடிய காதுகள் கேட்டுக் கொள்ளட்டும்.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 265)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா மற்றும் துன் நூரைன் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய பண்புகளின் நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 29 ஜனவரி 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **சுல்ஹ்** மாதம் **29 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் போர்களில் கலந்து கொண்டது தொடர்பாக எடுத்துக் கூறுகிறேன். பத்ர் போர் தொடர்பாக ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களால் பத்ர் போரில் கலந்து கொள்ள முடியவில்லை. ஏனென்றால் அவர்களது துணைவியாரும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகளுமான ஹஸ்ரத் ருகய்யா (ரலி) அவர்கள் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களைப் கவனித்துக் கொள்வதற்காக மதீனாவிலேயே இருக்குமாறு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். மேலும் அவர்களை பத்ர் போரில் கலந்து கொண்டவர்களைப் போன்றே கூறியிருந்தார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களுக்கு பத்ர் போரில் கலந்து கொண்டவர்களைப் போல போர்ச் செல்வத்திலும் நற்கூலியிலும் பங்கு நிர்ணயித்தார்கள்.

(ஷரஹ் அல்லாமா ஸர்கானீ.... தொகுதி 2 பக்கம் 334 கஸ்வா பத்ருல் குப்ரா – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

கத்ஃபான் போர் முஹர்ரம் அல்லது ஸஃபர் மாதத்தில் ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டு நடந்தது. கத்ஃபான் போருக்காக நஜத் பகுதியை நோக்கி புறப்பட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை மதீனாவின் அமீராக நியமித்தார்கள். ஆக இந்த வகையில் இதிலும் அன்னார் கலந்து கொள்ளவில்லை.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 41 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்தப் போரின் விளக்கத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் M.A (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்: கத்ஃபான் கோத்திரத்தைச் சேர்ந்த சில கிளை கோத்திரங்கள் அதாவது பனூ ஸஃலபா மற்றும் பனூ முஹாரிபுடைய மக்கள் தமது ஒரு பெயர்போன போர் வீரன் உஸூர் பின் ஹாரிஸின் தூண்டுதலின் பேரில் மதீனா மீது திடீர் தாக்குதல் தொடுக்கும் எண்ணத்தில் நஜத் உடைய ஒரு பகுதியான ஸீ அம்ர் எனுமிடத்தில் ஒன்று கூட ஆரம்பித்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது பகைவர்களின் அசைவுகளைக் குறித்து முறையாக அறிந்து வைத்திருந்தார்கள். அன்னாருக்கு இம்மக்களின் கொலை எண்ணம் தொடர்பாக குறித்த நேரத்தில் தகவல் கிடைத்து விட்டது. அன்னார் ஒரு விழிப்புணர்வு கொண்ட படைத் தளபதி போன்று முந்திச் செல்லும் வகையில் 1400 சஹாபிகளைக் கொண்ட குழுவைத் தம்முடன் அழைத்துக் கொண்டு ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டின் இறுதியில் அல்லது ஸஃபர் மாதத்தின் துவக்கத்தில் மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள்.

வேகமாக பயணித்தவாறு ஸீ அம்ருக்கு அருகில் சென்றடைந்து விட்டார்கள். அன்னாரின் வருகைக் குறித்து பகைவர்களுக்கு தகவல் கிடைத்ததும் அவர்கள் உடனடியாக அக்கம் பக்கத்திலிருந்த மலைக்குன்றுகளில் ஏறி தம்மை தற்காத்துக் கொண்டனர். முஸ்லிம்கள் ஸீ கோத்திரத்தைச் சேர்ந்த ஜப்பார் எனும் காட்டரபி சஹாபியிடம் பிடிபட்டு விட்டான். அவர்கள், அவனை கைது செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனிடம் நிலைமைகளைப் பற்றி வினவியபோது, பனூ ஸஃலபா மற்றும் பனூ முஹாரிபுடைய மக்கள் அனைவரும் மலைகளில் தஞ்சம் அடைந்து விட்டார்கள் என்பதும் அவர்கள் திறந்த போர்க்களத்தில் முஸ்லிம்களுக்கு முன்னால் வர மாட்டார்கள் என்பதும் தெரிய வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வேறு வழியின்றி திரும்பிச் செல்லுமாறு ஆணையிட நேர்ந்தது. ஆனால் இந்தப் போருக்கு இந்த அளவு பலன் நிச்சயம் ஏற்பட்டது. அதாவது அச்சமயம் பனூ கத்ஃபான் தரப்பிலிருந்து ஏற்பட்டிருந்த ஆபத்து தற்காலிகமாக அகன்று விட்டது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 463)

உஹது போர் ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் நடந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் உஹது போரில் கலந்து கொண்டார்கள். முதல் இரண்டு போர்களில் கலந்து கொள்ளவில்லை. இதில் கலந்து கொண்டார்கள். போருக்கிடையில் சஹாபிகளின் ஒரு குழு திடீர் தாக்குதல் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான(தாகக் கூறப்பட்டச்) செய்தியைக் கேட்டு போர்க்களத்திலிருந்து இங்கும் அங்கும் சிதறுண்டது. ஒரு நேரம் வந்தது. அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் 12 பேரைக் கொண்ட ஒரு சிறு குழுவே எஞ்சியிருந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் முதல் குழுசை சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

(ஷரஹ் அல்லாமா ஸர்கானி தொகுதி 2 பக்கம் 418,419 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முஸ்லிம்கள் குரைஷியர்களின் படை மீது ஆதிக்கம் பெற்று விட்டு, போர்ச் செல்வங்களை ஒன்று திரட்ட முற்பட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த ஐம்பது அம்பு எய்துபவர்களுக்குத் தமது இடத்தை விடக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தார்களோ, அவர்கள் வெற்றியைப் பார்த்து தமது இடத்தை விட்டு விலகி விட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ தமது இடத்தை விட்டு அகலக்கூடாது என்று அவர்களுக்கு வலியுறுத்திக் கூறியிருந்தார்கள்.

அப்பொழுது வரை முஸ்லிமாகியிருக்காத காலித் பின் வலீத் இந்தக் காட்சியைப் பார்த்து விட்டு, உடனடியாக அங்கிருந்து முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்து விட்டார். இந்தத் தாக்குதல் திடீரெனவும், இருந்தது. இதனால் எதிர்பாராத விதமாகவும் வலுவானதாகவும் இருந்ததென்றால், முஸ்லிம்கள் சிதறுண்டு போயினர். அந்த சிதறிப்போன சஹாபிகளில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் பெயரும் கூறப்படுகிறது. திருக்குர்ஆனில் இந்த மக்கள் தொடர்பாக, அந்த நேரத்தின் குறிப்பான நிலைமை, அவர்களின் உள்ளத்து ஈமான் மற்றும் கலப்பற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு அல்லாஹ் அவர்களை மன்னித்து விட்டான் என்று கூறப்பட்டுள்ளது. ஆக அல்லாஹ் கூறுகின்றான்:

إِنَّ الَّذِيْنَ تَوَلَّوْا مِنْكُمْ يَوْمَ الْتَقَى الْجَمْعٰنِ إِنَّمَا اسْتَزَلَّهُمُ الشَّيْطٰنُ بِبَعْضِ مَا كَسَبُوْا

وَلَقَدْ عَفَا اللّٰهُ عَنْهُمْ إِنَّ اللّٰهَ غَفُوْرٌ حَلِيْمٌ

இரு படைகள் நேருக்கு நேர் மோதிக் கொண்ட நாளில் உங்களுள் புறமுதுகு காட்டியவர்களை அவர்களின் செயல்கள் சிலவற்றின் காரணத்தால் ஷய்த்தான் நிச்சயமாக இடறி விழ வைக்க நாடினான்.

இப்பொழுது நிச்சயமாக அல்லாஹ் அவர்களை மன்னித்து விட்டான். நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் சகித்துக் கொள்பவனுமாவான். (3:155)

இந்தப் போரில் முஸ்லிம்களின் இந்த தன்மையைக் குறித்து எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் எழுதியுள்ளார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

குரைஷியர்களின் படை ஏறத்தாழ நாலாபுறமும் சுற்றி வளைத்திருந்தது. தமது படிப்படியான தாக்குதல்களால் ஒவ்வொரு கணமும் அழுத்திக் கொண்டே வந்தது. இதனாலும் கூட ஒருவேளை சிறிது நேரத்திற்குப் பிறகு முஸ்லிம்கள் சுதாரித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் என்ன வியப்பு ஏற்பட்டதென்றால், குரைஷியர்களின் ஒரு துணிச்சலான போர் வீரன் அப்துல்லாஹ் பின் கமிய்யா முஸ்லிம்களின் கொடியேந்துபவரான முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தான். தனது வாள் வீச்சால் அவர்களின் வலக்கையை வெட்டி வீழ்த்தினான். முஸ்அப் அவர்கள் உடனடியாக இன்னொரு கையால் கொடியை ஏந்திக் கொண்டு இப்னு கமிய்யாவை எதிர்ப்பதற்காக முன்னோக்கிச் சென்றார்கள். ஆனால் அவன் இரண்டாவது வீச்சில் அவர்களின் இரண்டாவது கையையும் வெட்டி விட்டான். இதனால் முஸ்அப் தமது இரண்டு வெட்டுண்ட கைகளையும் இணைத்து, கீழே விழுந்தவாறு இஸ்லாமியக் கொடியைத் தாங்க முயன்றார்கள். அதை நெஞ்சோடு இணைத்துக் கொண்டார்கள்.

இதனால் இப்னு கமிய்யா, அன்னார் மீது மூன்றாவது முறை வாள் வீசினான். இம்முறை முஸ்அப் ஷஹீதாகி விழுந்து விட்டார்கள். கொடியை வேறு ஒரு முஸ்லிம் உடனடியாக முன் வந்து பிடித்துக் கொண்டார். ஆயினும் முஸ்அப் (ரலி) அவர்களின் புறத்தோற்றம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு ஒத்துப்போனது. இப்னு கமிய்யா தான் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைக் கொலை செய்து விட்டதாகக் கருதினான். அல்லது இந்த விஷயம் வெறும் தீங்கிழைப்பதற்காகவும் ஏமாற்றும் எண்ணத்திலும் அவன் தரப்பிலிருந்து செய்யப்பட்டிருப்பதற்கும் சாத்தியமுள்ளது. எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்கள் ஷஹீதாகி விழுந்தபோது, நான் முஹம்மத் (ஸல) அவர்களைக் கொன்று விட்டேன் என்று அவன் கூச்சலிட்டான். இந்தச் செய்தியால் முஸ்லிம்களிடம் எஞ்சியிருந்த துணிவும் அகல ஆரம்பித்தது. அவர்களின் குழுமம் முற்றிலும் சிதறிப்போய் விட்டது. பல சஹாபிகள் பதற்றமடைந்து போர்க்களத்திலிருந்து ஓடி விட்டார்கள்.

அப்பொழுது முஸ்லிம்கள் மூன்று பாகங்களாகப் பிரிந்திருந்தனர். ஒரு குழுவோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான(தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விப்பட்டு போர்க்களத்தில் இருந்து ஓடி விட்டது. ஆனால் இந்தக் குழு மிகவும் குறைவாக இருந்தது. அல்லது நிராசை அடைந்து சிதறிப்போய் விட்டது என்று கூறலாம். அந்த மக்களில் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்வான் (ரலி) அவர்களும் ஒருவராவார்கள். ஆனால் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளபடி, அந்த நேரத்தின் குறிப்பிட்ட நிலைமைகள், அம்மக்களின் உள்ளத்து ஈமான் மற்றும் கலப்பற்ற தன்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு அல்லாஹ் அவர்களை மன்னித்து விட்டான். அந்த மக்களில் சிலர் மதீனா வரை சென்றடைந்தனர்.

இவ்வாறு மதீனாவிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான(தாகக் கூறப்பட்ட) சிந்தனை மற்றும் இஸ்லாமிய படை தோல்வியடைந்த செய்தி சென்றடைந்து விட்டது. அதனால் நகரம் முழுவதிலும் ஓர் அமளி ஏற்பட்டு விட்டது. முஸ்லிம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் மிகவும் பதற்றமடைந்த நிலையில் நகரத்திலிருந்து வெளியேறி வந்து, உஹது களத்தை நோக்கி புறப்பட்டு விட்டார்கள். சிலரோ வேகமாக ஓடியவாறு போர்க்களத்தை சென்றடைந்தார்கள். அல்லாஹ்வின் பெயரைக் கூறி பகைவர்களின் படைகளுக்குள் நுழைந்து விட்டார்கள். இரண்டாவது குழுவில் இருந்தவர்கள், ஓடிவிடவில்லை. எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான(தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விப்பட்டு ஒன்று துணிவிழந்து அமர்ந்து விட்டார்கள். இல்லையெனில், இனி சண்டையிடுவதை வீணானதாகக் கருத ஆரம்பித்தனர்.

எனவே போர்க்களத்திலிருந்து ஒரு புறம் அகன்று கவலைத் தோய்ந்து அமர்ந்து விட்டனர். மூன்றாவது குழுவோ தொடர்ச்சியாக போரிட்டுக் கொண்டிருந்தது. அவர்களில் சிலரோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி ஒன்று கூடியிருந்தனர். மேலும் தன்னிகரில்லா வாழ்வை அர்ப்பணித்தலின் திறமையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். பெரும்பாலானவர்களோ போர்க்களத்திலிருந்து கலைந்து போய் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

அவர்களுக்கும் மற்றும் இரண்டாவது குழுவைச் சேர்ந்தவர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிரோடு இருப்பது தெரிய வந்தபோது, அந்த மக்கள் பித்தர்களைப் போன்று சண்டையிட்டவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஒன்று கூடி வந்தனர். அப்பொழுது போரின் நிலைமை எப்படி இருந்ததென்றால் குரைஷியர்களின் படை கடலின் அச்சுறுத்தும் அலைகளைப் போன்று நாலா புறத்திலிருந்தும் முன்னோக்கி வந்து கொண்டிருந்தது. மேலும் போர்க் களத்தில் எல்லாப் புறத்திலிருந்தும் அம்புகளும், கற்களும் மழையாகப் பொழிந்து கொண்டிருந்தன.

வாழ்வை அர்ப்பணிக்கக் கூடியவர்கள் இந்த ஆபத்தான நிலையைப் பார்த்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி வட்டமிட்டு அன்னாருடைய அருளுக்குரிய உடலைத் தமது உடல்களால் மறைத்துக் கொண்டனர். இருந்தும் கூட, தாக்குதலின் பொறி கிளம்பியபோதெல்லாம், இந்த விரல் விட்டு எண்ணக்கூடிய சில மக்கள் அக்கம் பக்கம் தள்ளிவிடப்பட்டு வந்தனர். அத்தகைய நிலைமையில், சில வேளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கிட்டத்தட்ட தனியாக இருந்து விடுவார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 493–494)

எவ்வாறிருப்பினும் இதில் எடுத்துக் கூறப்படுவதாவது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் நிராசையடைந்தோ அல்லது வேறு ஏதோ காரணத்தினாலே, அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான(தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விப்பட்டு அங்கிருந்து சென்று விட்டார்கள். இவ்வாறு நிராசையடைந்து அமரக்கூடியவர்களில் சென்றிருக்கவில்லை; ஆனால் அமர்ந்திருக்கக்கூடியர்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றியும் கூறப்படுகிறது. எவ்வாறிருப்பினும் அது அதற்குரிய நேரத்தில் எடுத்துரைக்கப்படும்.

ஹுதைபியா உடன்படிக்கையின்போது தூதரை அனுப்புதல் மற்றும் பைஅத்துர் ரிஸ்வான் ஆகியவற்றில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் பங்களிப்பு என்னவாக இருந்தது? அல்லது அவர்கள் தொடர்பாக என்ன சம்பவங்கள் கிடைக்கப் பெறுகின்றன? ஆகியவற்றை தற்பொழுது எடுத்துரைக்கின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தாமும் தமது சஹாபிகளும் அமைதியான முறையில் தமது தலைகளை சிரைத்துக் கொண்டவாறு, (சிலர்) தமது முடிகளை கத்தரித்துக் கொண்டவாறு பைத்துல்லாஹ்வில் நுழைவதாகக் கனவு கண்டார்கள்.

இந்தக் கனவின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 6ஆம் ஆண்டு ஸூல் கஅதா மாதம் தமது 1400 சஹாபிகளோடு உம்ராவை நிறைவேற்றுவதற்காக மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். ஹுதைபியா எனும் இடத்தில் அன்னார் முகாமிட்டார்கள். குரைஷியர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உம்ராவை நிறைவேற்றுவதிலிருந்து தடுத்தார்கள். இரு தரப்பினருக்கும் மத்தியில் தூதரை அனுப்புதல் ஆரம்பமானது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவின் ஆவேச நிலையைப் பற்றி கேள்விப்பட்ட போது அன்னார், மக்காவிலேயே வசிக்கக்கூடிய, குரைஷியர்களின் ஏதேனும் கண்ணியத்திற்குரிய கோத்திரத்தைச் சேர்ந்த, தாக்கம் ஏற்படுத்தக்கூடிய ஒரு நபரை அனுப்ப வேண்டும் என்று கூறினார்கள்.

(ஷரஹ் அல்லாமா ஸர்கானீ தொகுதி 3 பக்கம் 169,170 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆக இந்த நோக்கத்திற்காக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் M.A (ரலி) அவர்கள் இதற்கான விளக்கத்தை எடுத்துரைத்துள்ளார்கள். அதிலிருந்து சிலவற்றை நான் எடுத்துரைக்கின்றேன். அன்னார் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு கனவு கண்டார்கள். அதில் அன்னார் தமது சஹாபிகளுடன் பைத்துல்லாஹ்வை வலம் வருவதாகக் கண்டார்கள். அப்பொழுது துல் கஅதா மாதம் அருகில் வந்தது. அது அறிவீனக் காலகட்டத்திலும் கூட அந்த அருளுக்குரிய நான்கு மாதங்களில் ஒரு மாதமாகக் கருதப்பட்டு வந்தது. அவற்றில் எல்லா விதமான போர்களும் தடுக்கப்பட்டிருந்தன. ஆக ஒரு புறமோ அன்னார் இந்தக் கனவைக் கண்டார்கள்.

மறுபுறம், இந்த நேரமும் எத்தகையதாக இருந்ததென்றால், அப்பொழுது முழு அரபு நாட்டிலும் போர் நிறுத்தம் ஏற்பட்டு அமைதி நிலவியது. ஆக இவை ஹஜ் நாட்களாக இருக்கவில்லை. அப்பொழுது வரை இஸ்லாத்தில் ஹஜ் முறையாக நிர்ணயிக்கப்படவும் இல்லை. ஆனால் கஅபா ஆலயத்தை வலம் வருதல் எப்பொழுதும் செய்யக்கூடியதாக இருந்தது. எனவே அன்னார் இந்தக் கனவைப் பார்த்த பிறகு தமது சஹாபிகளிடம், உம்ராவுக்காக தயாராகுங்கள் என்று கூறினார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் அன்னார் சஹாபிகள் மத்தியில், இந்தப் பயணத்தில் எவ்விதமான போர் ரீதியான எதிர்ப்பும் நமது நோக்கம் இல்லை. மாறாக, வெறும் ஓர் அமைதி நிறைந்த மார்க்க வழிபாட்டை நிறைவேற்றுவது நோக்கமாகும். எனவே முஸ்லிம்கள் இந்தப் பயணத்தில் தமது ஆயுதங்களை உடன் எடுத்துச் செல்லாதீர்கள். எனினும் அரபு நாட்டு வழக்கப்படி தமது வாள்களை உறையிலிட்டு, பயணிகளின் வழிமுறைப்படி தம்மோடு வைத்துக் கொள்ளலாம் என்று கூறினார்கள்.

அத்துடன் அன்னார் தம்மோடு இணைந்து உம்ராவை நிறைவேற்றுமாறு மதீனாவின் அக்கம் பக்கத்திலிருந்த, வெளிப்படையாக முஸ்லிம்களோடு இருந்த, காட்டரபி மக்களிடமும் கூறினார்கள். ஆனால் அந்தோ பரிதாபம்! மிகவும் சொற்பமான அதாவது பெயருக்கு சிலரைத் தவிர, மதீனாவின் அக்கம் பக்கத்தில் வசித்து வந்த முஸ்லிம் என்று அழைக்கப்பட்ட பலவீனமான ஈமானை உடைய காட்டரபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு புறப்பட மறுத்து விட்டார்கள்.

ஏனெனில் முஸ்லிம்களின் எண்ணம் உம்ராவைத் தவிர வேறு எதுவும் இல்லை என்றாலும், எந்நிலையிலும் குரைஷியர்கள் முஸ்லிம்களைத் தடுப்பார்கள். இவ்வாறு போர் சூழல் உருவாகும் என்று அவர்கள் எண்ணினர். இந்தப் போர் மக்காவிற்கு அருகிலும் மதீனாவை விட்டு தொலைவிலும் நடக்கும். எனவே எந்த முஸ்லிமும் உயிர் தப்பி திரும்ப முடியாது என்று அவர்கள் எண்ணினர். அதனால் அவர்கள் அச்சமடைந்து அதில் கலந்து கொள்ளவில்லை.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 1400 ற்கும் சற்று அதிகமான சஹாபிகளின் குழுவோடு ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு ஸுல் கஅதா மாதத்தின் துவக்கத்திலேயே திங்கட்கிழமை அன்று காலை வேளையில் மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். இந்தப் பயணத்தில் அன்னாரின் கண்ணியத்திற்குரிய துணைவியார் ஹஸ்ரத் உம்மே சலமா (ரலி) அவர்கள் அன்னாரின் பயணத் துணையாக இருந்தார்கள். மதீனாவின் அமீராக நுமைலா பின் அப்தில்லாஹ் அவர்களும் இமாமுஸ் ஸலாத்தாக கண் பார்வையற்ற அப்துல்லாஹ் பின் உம்மே மக்தூம் அவர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

அன்னார் மதீனாவிலிருந்து ஏறத்தாழ 6 மைல் தொலைவில் மக்காவின் வழியில் அமைந்துள்ள ஸுல் குலைஃபா என்ற பகுதியை அடைந்தபோது, அங்கு தங்குமாறு கட்டளை பிறப்பித்தார்கள். மேலும் லுஹர் தொழுகையை நிறைவேற்றிய பிறகு 70 எண்ணிக்கையிலிருந்த குர்பானுக்கான ஒட்டகங்களை அடையாளமிடுமாறு கட்டளை பிறப்பித்தார்கள். மேலும் சஹாபிகளுக்கு அவர்கள் ஹாஜிகளின் குறிப்பான ஆடையை – (இது இஸ்லாமிய உவமையில் இஹ்ராம் என்று கூறப்படுகிறது). அணியுமாறு வழிகாட்டினார்கள். மேலும் தாமும் இஹ்ராம் அணிந்து கொண்டார்கள். பிறகு குரைஷியர்களின் நிலைமைகளை அதாவது அவர்கள் ஏதாவது தீங்கிழைக்கும் எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லையே! என்பதை அறிந்து வருவதற்காக மக்காவிற்கு அருகில் வசித்து வந்த, குசாஆ என்ற கோத்திரத்தைச் சேர்ந்த பிஸர் பின் சூஃப்யான் என்ற பெயரையுடைய செய்தி அறிந்து கொண்டு வரக்கூடியவரை முன்னால் அனுப்பினார்கள்.

மேலும் சிறிது சிறிதாக மக்காவை நோக்கி முன்னோக்கிச் சென்றார்கள். மேற்கொண்டு முன்னெச்சரிக்கையான வகையில் முஸ்லிம்களுடைய மிகப்பெரும் கூட்டத்திற்கு முன்னால் இருப்பதற்காக உபத் பின் பிஷர் உடைய தலைமையில் இருபது குதிரை வீரர்களைக் கொண்ட ஒரு சிறு குழுவையும் நிர்ணயித்தார்கள். அன்னார் சில நாட்கள் பயணத்திற்குப் பிறகு மக்காவிலிருந்து ஏறத்தாழ இரண்டு மன்ஸில் தொலைவில் இருக்கக்கூடிய அஸ்ஃபான் என்ற இடத்தை அடைந்தபோது (ஒரு மன்ஸில் ஒன்பது மைல் என்று கூறப்படுகிறது).

அன்னாருடைய செய்தியாளர் அன்னாரிடம் திரும்பி வந்து, மக்காவின் குரைஷியர்கள் மிகவும் உத்வேகமாக இருக்கிறார்கள். தங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு உறுதியான எண்ணம் கொண்டிருக்கின்றார்கள். எதுவரையெனில், அவர்களில் சிலர் தமது உத்வேகம் மற்றும காட்டுமிராண்டித்தனத்தை வெளிப்படுத்துவதற்காக சிறுத்தைகளின் தோல்களை அணிந்துள்ளனர். மேலும் போருக்கான உறுதியான எண்ணம் கொண்டு, எந்நிலையிலும் முஸ்லிம்களை தடுத்து நிறுத்தும் எண்ணம் கொண்டுள்ளனர் என்ற தகவலைக் கொடுத்தார்.

குரைஷியர்கள் தமது சில உயிரை அர்ப்பணிக்கக்கூடிய குதிரை வீரர்களின் ஒரு சிறு படைக் குழுவை, அப்பொழுது வரை முஸ்லிம் ஆகியிருக்காத காலித் பின் வலீத் அவர்களின் தலைமையில் முன்னால் அனுப்பி விட்டார்கள் என்பதும் மேலும் இந்த சிறு படைக் குழு தற்போது முஸ்லிம்களுக்கு அருகில் வந்து விட்டது; அந்த சிறு படைக் குழுவில் அபூஜஹிலின் உடைய மகன் இக்ரிமா போன்றோரும் இருக்கின்றனர் என்பதும் தெரிய வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த செய்தியை கேள்விபட்டபோது, எதிரெதிரே மோதுவதிலிருந்து தவிர்ந்து இருக்கும் நோக்கத்தில் சஹாபிகளுக்கு, மக்காவிற்கு செல்லும் அறியப்பட்ட வழியை விட்டு விட்டு, வலப்புறமாக முன்னோக்கிச் செல்லுங்கள் என்று ஆணையிட்டார்கள்.

ஆக முஸ்லிம்கள் ஒரு நெருக்கடியான, இடைஞ்சலான வழியில் சென்று கடல் பக்கமாக சென்றவாறு முன்னோக்கி செல்ல ஆரம்பித்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தப் புதிய வழியில் சென்றவாறு மக்காவிலிருந்து ஒரு மன்ஸில் அதாவது வெறும் 9 மைல் தொலைவில் அமைந்துள்ள ஹுதைபியாவுக்கு அருகில் சென்றடைந்தார்கள். மேலும் ஹுதைபியா உடைய பள்ளத்தாக்குகளிலிருந்து மக்காவின் பகுதி ஆரம்பித்து விடுகிறது. அப்பொழுது பல போர்களில் அன்னாருக்கு பயன்பட்டிருந்த, அல் குஸ்ஸூ என்ற பெயரால் பிரசித்தி பெற்றிருந்த அன்னாரின் பெண் ஒட்டகம் ஒரேயடியாகக் கால்களைப் பரப்பிக் கொண்டு தரையில் அமர்ந்து விட்டது. எழுப்பியும் எழுந்தபாடில்லை. ஒருவேளை களைத்து விட்டது போலும் என்று சஹாபிகள் கூறினர்.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இல்லை! இல்லை! இது களைக்கவில்லை. மேலும் இவ்வாறு களைத்துப் போய் அமர்ந்து விடுவது இதன் வழக்கத்திலும் இல்லை. மாறாக, உண்மை என்னவென்றால் இதற்கு முன்னர் யானைப் படையினரின் யானைகளை மக்காவின் பால் முன்னோக்கி செல்வதிலிருந்து தடுத்த அதே மேலான(இறை)வன் இப்பொழுது இந்த ஒட்டகத்தையுத் தடுத்துள்ளான். ஆக இறைவன் மீது ஆணையாக! மக்காவின் குரைஷியர்கள் கண்ணியத்திற்குரிய இடத்தின் கண்ணியத்திற்காக என்னிடம் என்ன கோரிக்கை வைத்தாலும் நான் அதை ஏற்றுக் கொள்வேன் என்று கூறினார்கள்.

இதற்குப் பிறகு அன்னார் தமது ஒட்டகத்தை மீண்டும் எழுமாறு கூறினார்கள். இறைவனின் வல்லமை! இம்முறை அது உடனடியாக எழுந்து நடக்கத் தயாராகி விட்டது. அப்பொழுது அன்னார் அதை ஹுதைபியாவின் அடுத்த எல்லையை நோக்கி அழைத்துச் சென்றார்கள். அங்கு ஒரு நீரூற்றுக்கு அருகில் நிறுத்தி விட்டு ஒட்டகத்திலிருந்து கீழிறங்கி வந்தார்கள். அதே இடத்தில் அன்னாருக்கு சஹாபிகள் கூடாரம் அமைத்து விட்டார்கள்.

மேற்கொண்டு குரைஷியர்களோடு சமாதான பேச்சுவார்த்தை எவ்வாறு துவங்குவது என்பது பற்றிய குறிப்பு இங்கு வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுதைபியாவின் பகுதியை அடைந்து அந்தப் பகுதியின் நீரூற்றுக்கு அருகில் தங்கினார்கள். சஹாபிகள் அங்கு கூடாரம் அமைத்திருந்தபோது, அருகிலுள்ள பகுதியிலேயே வசித்து வந்த குஸாஆ கோத்திரத்தின் ஒரு பெயர் போன தலைவர் பதீல் பின் வரக்கா தமது சில தோழர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திப்பதற்காக வந்தார். அவர் அன்னாரிடம், மக்காவின் தலைவர்கள் போருக்காக ஆயத்தமாக உள்ளார்கள். அவர்கள் ஒருபோதும் தங்களை மக்காவில் நுழைய விட மாட்டார்கள் என்று கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நாங்களோ போர் செய்யும் எண்ணத்தில் வரவில்லை. மாறாக, உம்ரா செய்யும் நோக்கத்தோடு மட்டும் தான் வந்துள்ளோம். அந்தோ பரிதாபம்! இவ்வாறிருந்தும் கூட மக்காவின் குரைஷியர்களை போரின் நெருப்பு எரித்து சாம்பலாக்கி வைத்துள்ளது. ஆயினும் கூட இம்மக்கள் திருந்துவதில்லை.அவர்கள் எனக்கு எதிராகப் போரை நிறுத்தி விட்டு என்னை மற்ற மக்களுக்காக சுதந்திரமாக விடுவதற்கான உடன்படிக்கையை அவர்களுடன் செய்வதற்கு நான் ஆயத்தமாக உள்ளேன். மக்கத்தினரோடு நான் சண்டையிடப் போவதில்லை. அவர்களோடு எந்தத் தொடர்பும் வைக்க மாட்டேன். மற்ற மக்களுக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பேன்.

ஆனால் அவர்கள் என்னுடைய இந்த ஆலோசனையையும் நிராகரித்து விட்டு எந்நிலையிலும் போர் நெருப்பை மூட்டி வைத்திருப்பார்களாயின், என்னுடைய உயிர் எவன் கையில் உள்ளதோ அவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். பிறகு நானும் கூட போர் புரிவதிலிருந்து, ஒன்று என் உயிர் இவ்வழியில் அர்ப்பணம் ஆகிவிடும் வரை அல்லது இறைவன் எனக்கு வெற்றியை வழங்கும் வரை பின் வாங்க மாட்டேன். நான் அவர்களோடு போரிட்டு அழிந்து விட்டால் கதை முடிந்து விடும். ஆனால் இறைவன் எனக்கு வெற்றியை வழங்கி, நான் கொண்டு வந்துள்ள மார்க்கம் மேலோங்கி விட்டால் பிறகு மக்கத்தினருக்கு ஈமான் கொள்வதில் எந்தத் தயக்கமும் இருக்கக்கூடாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த கலப்பற்ற மற்றும் வேதனை மிகுந்த சொற்பொழிவால் பதீல் பின் வரக்கா மீது மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் அன்னாரிடம், தாங்கள் எனக்கு சற்று கால அவசாகம் கொடுங்கள்; நான் மக்கா சென்று தங்களின் தூதுச் செய்தியை எட்ட வைக்கிறேன். சமரசத்திற்கு முயற்சி செய்கிறேன் என்று கேட்டார். அன்னார் அனுமதி வழங்கி விட்டார்கள். பதீல் தனது கோத்திரத்தின் சில மக்களை உடன் அழைத்துக் கொண்டு மக்காவை நோக்கி புறப்பட்டார்.

பதீல் பின் வராக்கா மக்கா சென்றடைந்தபோது, அவர் குரைஷியர்களை ஒன்றுகூட்டி அவர்களிடம், நான் அந்த நபர் அதாவது ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களிடமிருந்து வருகிறேன். எனக்கு முன் அவர் ஓர் ஆலோசனையை முன் வைத்தார். நீங்கள் அனுமதி அளித்தால் அதைக் கூறட்டுமா? என்று கேட்டார். இதைக்கேட்ட குரைஷிகளின் ஆவேசமான, பொறுப்பற்ற மக்கள், நாங்கள் அந்த நபரின் எந்தப் பேச்சையும் கேட்கத் தயாராக இல்லை என்று கூற ஆரம்பித்தனர். ஆனால் கருத்து கூறும் அறிஞர்கள், எந்த ஆலோசனையாக இருந்தாலும் அதை எங்களுக்குக் கூறுங்கள் என்றனர். ஆக பதீல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எடுத்துரைத்த ஆலோசனையைக் கூறினார்.

இதைக் கேட்ட ஸகீஃப் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு செல்வாக்குமிக்க தலைவரான உர்வா பின் மஸ்ஊது என்பவர், அப்பொழுது மக்காவில் இருந்தவர்; எழுந்து நின்றார். மேலும் அரபு நாட்டின் பண்டைய வழக்கத்திற்கேற்ப குரைஷியர்களிடம், மக்களே! நான் உங்கள் தந்தையின் இடத்தில் இல்லையா? என்று கேட்டார். அதற்கு அவர்கள், ஆம் என்றனர். பிறகு அவர், நீங்கள் என்னுடைய மகன்களைப் போன்று இல்லையா? என்று கேட்டார். அதற்கு அவர்கள் ஆம் என்றனர்.

பிறகு உர்வா, உங்களுக்கு என்மீது ஏதாவது அவநம்பிக்கை உள்ளதா? என்று கேட்டார். அதற்கு குரைஷியர்கள், ஒருபோதும் இல்லை என்றனர். இதைக்கேட்ட பிறகு என்னுடைய கருத்து என்னவென்றால், அந்த நபர் முஹம்மத் (ஸல்) அவர்கள் உங்களுக்கு முன் ஓர் உன்னதமான விஷயத்தை முன் வைத்துள்ளார். நீங்கள் அவருடைய ஆலோசனையை ஏற்றுக் கொள்ளுங்கள். நான் உங்கள் தரப்பிலிருந்து முஹம்மத் (ஸல்) அவர்களிடம் சென்று மேற்கொண்டு பேச்சு வார்த்தை நடத்த அனுமதி தாருங்கள் என்றார். அதற்கு குரைஷியர்கள், நீங்கள் தாராளமாகச் சென்று பேச்சு வார்த்தை நடத்துங்கள் என்று கூறினர்.

அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபையை அடைந்தபோது, அங்கு அவர் ஆன்மாவை உருக்கக்கூடிய ஒரு காட்சியையும் கண்டார். உர்வா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். அன்னார் தாம் இதற்கு முன் பதீல் பின் வரக்காவிடம் கூறியிருந்த அதே விஷயங்களை அவருக்கு (உர்வாவுக்கு) முன் மீண்டும் கூறினார்கள். உர்வா அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருத்தோடு ஒத்துப் போனார். ஆனால் குரைஷியர்கள் தரப்பிலிருந்து தூதுக்கான உரிமையை நிறைவேற்றவும், அவர்களின் பங்கில் அதிகதிகமாக நிபந்தனைகளைப் பதிய வைக்கவும் விரும்பினார்.

உர்வா அன்னாரோடு பேச்சு வார்த்தையை முடித்து விட்டு குரைஷியர்களை நோக்கி சென்றார். சென்றதுமே குரைஷியர்களிடம், மக்களே! நான் உலகில் பல பயணங்கள் மேற்கொண்டுள்ளேன். பேரரசர்களின் அவைகளில் கலந்து கொண்டுள்ளேன். சீசர், கிஸ்ரா மற்றும் நஜ்ஜாஸி ஆகியோருக்கு முன் பிரதிநிதி குழுவாக ஆஜராகியுள்ளேன். ஆனால் இறைவன் மீது ஆணையாக! எவ்வாறு நான் முஹம்மத் (ஸல்) அவர்களின் சஹாபிகளை முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு மதிப்பளிக்கக் கண்டேனோ, அவ்வாறு நான் வேறு எந்த இடத்திலும் காணவில்லை. பிறகு அவர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபையில் தான் கண்ட அந்தக் காட்சிகள் அனைத்தையும் எடுத்துரைத்தார்.

கடைசியில், நான் பிறகு இந்த ஆலோசனையையே கூறுகிறேன். அதாவது முஹம்மத் (ஸல்) அவர்களின் ஆலோசனை ஒரு நீதியான ஆலோசனை ஆகும். அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

உர்வாவின் இந்த உரையாடலைக் கேட்ட கனானா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு தலைவர் ஹலீஸ் பின் அலக்கமா என்பவர், நீங்கள் விரும்பினால், நான் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் செல்கிறேன் என்று கூறினார். அவர்கள், தாராளமாக செல்லுங்கள் என்றனர். ஆக இந்த நபர் ஹுதைபியா வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரைத் தொலைவில் வரக்கண்டபோது, சஹாபிகளிடம் நம்மை நோக்கி வரக்கூடிய இந்த நபர் எத்தகைய கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்றால், அவர்கள் குர்பான் கொடுக்கும் காட்சிகளை விரும்புவர். எனவே உடனடியாக உங்களுடைய குர்பான் விலங்குகளை ஒன்று திரட்டி அவருக்கு முன் கொண்டு வாருங்கள். நாம் எந்த நோக்கத்தோடு வந்துள்ளோம் என்பது அவருக்கு தெரிய வரட்டும்; உணர்வு ஏற்படட்டும் என்று கூறினார்கள். ஆக சஹாபிகள் தமது குர்பான் விலங்குகளை ஓட்டியவாறு தக்பீர் முழக்கங்களை உயர்த்தியவாறு அவருக்கு முன் ஒன்று கூடிவிட்டார்கள்.

அவர் இந்தக் காட்சியை பார்த்தபோது, சுப்ஹானல்லாஹ்; சுப்ஹானல்லாஹ். இவர்களோ ஹாஜிகள். இவர்களை பைத்துல்லாஹ்வை தவாஃப் செய்வதிலிருந்து எவ்வகையிலும் தடுத்து நிறுத்த முடியாது என்று கூறினார். ஆக அவர் உடனடியாக குரைஷியர்களிடம் திரும்பிச் சென்று குரைஷியர்களிடம், முஸ்லிம்கள் தங்கள் விலங்குகளின் கழுத்தில் குர்பானுக்கான மாலையை அணிவித்திருப்பதையும் அவற்றின் மீது அடையாளமிட்டிருப்பதையும் நான் கண்டேன். எனவே அவர்கள் கஅபாவை தவாஃப் செய்வதிலிருந்து எவ்வகையிலும் தடுக்க முடியாது என்று கூறினார்.

குரைஷியர்களிடம் அப்பொழுது ஒரு கடுமையான சிதறல் தன்மை உருவாகிக் கொண்டிருந்தது. மக்களின் இரு பிரிவுகள் உருவாகிவிட்டன. ஒரு குழு, எந்நிலையிலும் முஸ்லிம்களைத் திருப்பி அனுப்புவதில் பிடிவாதம் கொண்டு போர் சிந்தனையில் உறுதியாக நிலைநின்றது. ஆனால் இன்னொரு குழு, அதை தனது தொன்மையான மத வழக்கத்திற்கு எதிராகக் கண்டு அஞ்சிக் கொண்டிருந்தது. மேலும் ஏதேனும் கண்ணியத்திற்குரிய உடன்படிக்கைக்கு ஆசைப்பட்டுக் கொண்டிருந்தது. எனவே தீர்மானம் தள்ளிப்போய் கொண்டிருந்தது.

இந்த சந்தர்ப்பத்தில் முக்ரஸ் பின் ஹஃபஸ் எனும் ஓர் அரபு தலைவன் குரைஷியர்களிடம், என்னை செல்ல விடுங்கள். நான் ஏதாவது தீர்மானத்திற்கான வழியை தேடி விடுவேன் என்றான். குரைஷியர்கள், சரி. நீங்களும் முயற்சித்து பாருங்கள் என்றனர். ஆக அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனைத் தொலைவில் வரக்கண்டபோது, இறைவன் காப்பாற்றுவானாக. இந்த மனிதனோ நல்லவன் இல்லை என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் முக்ரஸ் அன்னாரிடம் வந்து பேச ஆரம்பித்தான். ஆனால் அவன் பேசிக் கொண்டு தான் இருந்தான். மக்காவின் ஒரு பெயர் போன தலைவர் ஸுஹைல் பின் அம்ர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். அநேகமாக அவரை குரைஷியர்கள் தமது பதற்றத்தில் முக்ரஸ் திரும்ப வருவதற்காகக் காத்திருக்காமலேயே அனுப்பி விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸுஹைலைப் பார்த்தபோது, இதோ ஸுஹைல் வருகிறார். இப்பொழுது இறைவன் நாடினால் விவகாரம் எளிமை ஆகிவிடும் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் இந்தப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் இந்த சம்பவமும் நிகழ்ந்தது. குரைஷியர்கள் தரப்பிலிருந்து ஒருவர் பின் ஒருவராக தூதுவர்கள் வரத் தொடங்கியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னார் தரப்பிலிருந்தும் ஒரு புரியும் திறன் கொண்ட நபர் குரைஷியர்களிடம் செல்ல வேண்டும். அவர் அவர்களுக்கு புரிய வைக்கக்கூடியவராக இருக்க வேண்டும் என்று உணர்ந்து, இந்தப் பணிக்காக கராஷ் பின் உமய்யா என்பவரைத் தேர்ந்தெடுத்தார்கள். அவர் கஸாஆ கோத்திரத்தைச் சேர்ந்தவர், அதாவது எந்த கோத்திரத்தைச் சேர்ந்தவராக குரைஷியர்களின் முதல் தூதுவர் பதீல் பின் வரக்கா இருந்தாரோ அதே கோத்திரத்திலிருந்து அனுப்பினார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கராஷுக்குப் பயணத்திற்காக தமது ஓர் ஒட்டகத்தை வழங்கினார்கள். கராஷ் குரைஷியர்களிடம் சென்றார். ஆனால் தற்பொழுது பேச்சு வார்த்தையின் ஆரம்பகட்டமாக இருந்தது. மேலும் குரைஷிய இளைஞர்கள் மிகவும்

ஆவேசத்தில் இருந்தார்கள். ஓர் ஆவேசமான இளைஞன், அபூ ஜஹ்ல் உடைய மகன் இக்ரிமா கராஷின் ஒட்டகத்தின் மீது தாக்குதல் தொடுத்து அதைக் காயப்படுத்தி விட்டான். இதற்கு அரபு வழக்கப்படி நாங்கள் உங்களின் வருகையை வலுக்கட்டாயமாகத் தடுக்கின்றேன் என்று பொருளாகும்.

அது மட்டுமின்றி குரைஷியர்களின் இந்த ஆவேசமான குழு கராஷ் அவர்களையும் தாக்க நினைத்தது. ஆனால் முதியவர்கள் விலக்கி விட்டு அவரது உயிரைக் காப்பாற்றினர். அவர் இஸ்லாமிய முகாமுக்கு திரும்பி வந்து விட்டார். அவர் குரைஷியர்களிடமிருந்து திரும்பி வந்து விட்டார். மக்கத்து குரைஷியர்கள் இதை மட்டும் போதுமானதாகக் கருதவில்லை. மாறாக, தமது உத்வேகத்தில் குருடர்களாகி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அன்னாரின் சஹாபிகளும் மக்காவுக்கு மிக அருகிலும் மதீனாவை விட்டு மிகத் தொலைவிலும் வந்தவுடன், அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து இயன்ற அளவு இழப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் எண்ணம் கொண்டனர். ஆக இந்த நோக்கத்திற்காக அவர்கள் 40,50 பேர் கொண்ட ஒரு குழுவை ஹுதைபியாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள்.

அதே நேரத்தில் இரு தரப்புக்கும் நடுவில் ஏற்பட்டு வந்த உரையாடல் எனும் திரைமறைவில் இஸ்லாமிய முகாமுக்கு அக்கம் பக்கம் சுற்றியவாறு காத்துக் கொண்டிருங்கள். சந்தர்ப்பம் பார்த்து முஸ்லிம்களுக்கு இழப்பை ஏற்படுத்தி வாருங்கள் என்று அவர்களுக்கு வழிகாட்டியிருந்தார்கள். மாறாக, சில அறிவிப்புகளில் இருந்து எதுவரை தெரிய வருகிறது என்றால், இவர்கள் எண்ணிக்கையில் 80 பேர் இருந்தனர்.

மேலும் இந்த சந்தர்ப்பத்தில் குரைஷியர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொல்லவும் முயன்றனர். எனினும் எவ்வாறிருப்பினும், இறைவன் அருளால் முஸ்லிம்கள் தமது இடத்தில் விழிப்போடு இருந்தார்கள். ஆக குரைஷியர்களின் இந்த சூழ்ச்சியின் இரகசியம் வெளிப்பட்டு விட்டது. இவர்கள் அனைவரும் பிடிக்கப்பட்டு விட்டனர். முஸ்லிம்களுக்கு கண்ணியத்திற்குரிய மாதத்தில், மேலும் கண்ணியத்திற்குரிய பகுதியில் மக்கத்தினர் செய்த இந்த செயலால் கடும் கோபம் ஏற்பட்டது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த மக்களை மன்னித்து விட்டார்கள். மேலும் சமரசப் பேச்சு வார்த்தையில் எந்தத் தடையையும் வரவிடவில்லை.

மக்கத்தினரின் இந்த செயலைப் பற்றி திருக்குர்ஆனும் கூறியுள்ளது. ஆக அல்லாஹ் கூறுகிறான்:

هُوَ الَّذِیْ کَفَّ اَیۡدِیَہُمۡ عَنۡکُمۡ وَاَیۡدِیَکُمۡ

عَنۡہُمۡ بِبَطۡنِ مَکَّۃَ مِنۡۢ بَعۡدِ اَنۡ اَظۡفَرَکُمۡ عَلَیۡہِمۡ ؕ وَکَانَ اللّٰہُ بِمَا تَعۡمَلُوۡنَ بَصِیۡرًا

அவனே உங்களுக்கு அவர்களின் மேல் வெற்றியினை வழங்கியதன் பின்னர், மக்காவின் பள்ளத்தாக்கில் அவர்களது கைகளை உங்களை விட்டும், உங்கள் கைகளை அவர்களை விட்டும் தடுத்தான். மேலும் நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் உற்றுப் பார்க்கின்றவனாவான்.

எவ்வாறிருப்பினும் நாம் இந்த அனைத்து நிலைமைகளையும் அதன் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தொடர்ச்சியான பொறுமை, மன தைரியம் மற்றும் அமைதிக்கான முயற்சி ஆகியவற்றையும் பார்க்கும்பொழுது, இது எத்தகைய ஒரு பொறுமை மற்றும் அமைதிக்கான முயற்சி என்றால், அதற்கு உலகில் எந்த முன்னுதாரணமும் கிடைக்க முடியாது என்பது நமக்குத் தென்படுகிறது. அன்னார் தொடர்ச்சியாக அமைதிக்கான சூழ்நிலை உருவாக விட வேண்டும் என்று முயற்சி மேற்கொண்டு வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குரைஷியர்களின் தீமையைக் கண்டபோது, அத்துடன் கராஷ் பின் உமய்யாவிடமிருந்து மக்கத்தினரின் ஆவேச நிலையைப் பற்றி கேள்விப்பட்டபோது, குரைஷியர்களை குளிரச் செய்வதற்கும், நேர்வழியில் கொண்டு வரும் நோக்கத்திலும் மக்காவிலேயே வசிக்கக்கூடிய குரைஷியர்களின் ஏதேனும் கண்ணியத்திற்குரிய கோத்திரத்தோடு தொடர்புடைய தாக்கம் ஏற்படுத்தக்கூடிய ஒரு நபரை அனுப்ப வேண்டும் என்று எண்ணினார்கள். அதாவது இதற்குப் பிறகும் அன்னார் முயற்சியை கைவிடவில்லை. மாறாக, யாரையாவது மீண்டும் அனுப்ப வேண்டும் என்று பிறகும் சிரமம் மேற்கொண்டார்கள்.

ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களிடம், நீங்கள் மக்கா சென்று, முஸ்லிம்கள் தரப்பிலிருந்து தூதுத்துவத்திற்கான கடமையை நிறைவேற்றுவது சிறப்பாக இருக்கும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! மக்கத்து வாசிகள் எனக்குக் கடுமையான பகைவர்களாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தாங்கள் அறிவீர்கள். மேலும் இப்பொழுது மக்கத்தினருக்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய, எனது கோத்திரத்தைச் சேர்ந்த செல்வாக்குப் பெற்ற எந்த நபரும் மக்காவில் இல்லை.

எனவே எனது ஆலோசனை என்னவெனில், வெற்றிக்கான வழியை எளிமை ஆக்குவதற்கு, இந்தத் தொண்டுக்காக உஸ்மான் பின் அஃப்பானைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களின் கோத்திரமான பனூ உமைய்யா தற்பொழுது மிகவும் செல்வாக்கு பெற்றுள்ளது. மேலும் மக்கத்தினர் உஸ்மானுக்கு எதிராக தீங்கிழைக்கத் துணிய மாட்டார்கள். வெற்றிக்கு அதிக நம்பிக்கை உள்ளது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த ஆலோசனை பிடித்து விட்டது. அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் மக்கா சென்று குரைஷியர்களுக்கு முஸ்லிம்களின் அமைதி நிறைந்த எண்ணங்கள் மற்றும் உம்ராவின் எண்ணம் குறித்து தெரியப்படுத்துமாறு கூறினார்கள். அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு தம் தரப்பிலிருந்து ஒரு மடலையும் எழுதித் தந்தார்கள். அது குரைஷிய தலைவர்களின் பெயரில் இருந்தது. அந்த மடலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் வந்திருப்பதன் நோக்கத்தை எடுத்துரைத்தார்கள்.

மேலும் எங்கள் நோக்கம் இறைவணக்கத்தை நிறைவேற்றுவது மட்டும்தான். நாங்கள் முழு அமைதியான சூழலில் உம்ராவை நிறைவேற்றி விட்டு திரும்பிச் சென்று விடுவோம் என்று குரைஷியர்களுக்கு உறுதியளித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம், மக்காவில் இருக்கும் பலவீனமான முஸ்லிம்களையும் சந்திக்க முயற்சி செய்யுங்கள். அவர்களின் தைரியத்தை அதிகரியுங்கள். அவர்களிடம், இன்னும் சற்று பொறுமையோடு செயல்படுங்கள். இறைவன் அண்மையில் வெற்றிக்கான கதவுகளைத் திறக்கவுள்ளான் என்று கூறும்படி கூறினார்கள்.

இந்தத் தூதுச் செய்தியை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்கா சென்றார்கள். அபூ ஸுஃப்யானை சந்தித்து – அவர் மக்காவின் பெரும் தலைவராக இருந்தார். மேலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் நெருங்கிய அன்பராகவும் இருநதார். (அவரைச் சந்தித்து) மக்காவாசிகளின் ஒரு பொது சபையில் ஆஜரானார்கள். அந்த சபையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மடலை முன் வைத்தார்கள்.

அதைப் பல்வேறு குரைஷிய தலைவர்கள் தனித்தனியாகப் படித்தார்கள். இருந்தும் கூட அவர்கள் அனைவரும், எந்நிலையிலும் முஸ்லிம்கள் இவ்வாண்டு மக்காவிற்குள் நுழையக்கூடாது என்ற தமது பிடிவாதத்தில் நிலைத்து நின்றார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அழுத்தம் கொடுத்தபோது குரைஷியர்கள், உங்களுக்கு அதிக ஆர்வமிருந்தால், நாங்கள் உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் பைத்துல்லாஹ்வை தவாஃப் செய்ய வாய்ப்பு கொடுத்து விடுகிறோம். ஆனால் இதை விட அதிகம் முடியாது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ மக்காவிற்கு வெளியில் தடுக்கப்பட்டு, நான் தவாஃப் செய்வதா? இது எப்படி முடியும்? என்று கேட்டார்கள். ஆனால் குரைஷியர்கள் எவ்விதத்திலும் ஒப்புக் கொள்ளவில்லை. கடைசியில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் நிராசையடைந்து திரும்பிச் செல்ல ஆயத்தமானார்கள். அந்த சந்தர்ப்பத்தில் மக்காவின் தீங்கிழைக்கக்கூடியவர்களுக்கு ஒரு தீய யோசனை வந்தது. அவர்கள் அநேகமாக, இவ்வாறு நமக்கு சமரசத்தில் அதிகப் பலனுள்ள நிபந்தனைகள் கிடைக்கப்பெறும் என்ற எண்ணத்தில், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களையும், அவர்களுடன் வந்தவர்களையும் மக்காவில் தடுத்து நிறுத்தி விட்டார்கள்.

இதனால், மக்கத்தினர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொன்று விட்டார்கள் என்ற வதந்தி முஸ்லிம்கள் மத்தியில் பரவி விட்டது. இந்தச் செய்தி வந்தடைந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கடுங்கோபமும் கவலையும் இருந்தது. அப்பொழுது அன்னார் அங்கு பைஅத்துர் ரிஸ்வான் என்ற பைஅத்தை வாங்கினார்கள்.

இது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இந்தச் செய்தி ஹுதைபியாவை எட்டியபோது, முஸ்லிம்களிடம் கடுமையான உத்வேகம்

உருவானது. ஏனெனில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மருமகனும் கண்ணியத்திற்குரிய சஹாபிகளில் ஒருவராகவும் இருந்தார்கள். மேலும் இஸ்லாமிய தூதுவராக மக்கா சென்றிருந்தார்கள். இந்த நாளும் கண்ணியத்திற்குரிய மாதங்களுடையதாக இருந்தது. கண்ணியத்திற்குரிய மாதமாக இருந்தது. பிறகு மக்காவும் கண்ணியத்திற்குரிய பகுதியாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடனடியாக அனைத்து முஸ்லிம்கள் மத்தியிலும் அறிவிப்பு செய்து அவர்களை ஒரு பபூல் அதாவது கருவேல மரத்தின் கீழ் ஒன்றிணைத்தார்கள்.

சஹாபிகள் ஒன்றுகூடியதும் இந்தச் செய்தியைக் குறிப்பிட்டு, இந்தத் தகவல் சரியானது என்றால், இறைவன் மீது ஆணையாக! நாம் உஸ்மானுக்காகப் பழிவாங்காத வரை இவ்விடத்தை விட்டு நகரமாட்டோம் என்று கூறினார்கள். பிறகு அன்னார் சஹாபிகளிடம், வாருங்கள். இஸ்லாத்தில் உள்ள பைஅத் வழிமுறைப்படி எனது கைமீது கை வைத்து உங்களில் எவரும் புறமுதுகு காட்ட மாட்டார்; தனது உயிரைப் பணயம் வைப்பாரே தவிர எந்நிலையிலும் தனது இடத்தை விட மாட்டார் என்று உறுதிமொழி எடுங்கள் என்று கூறினார்கள்.

இந்த அறிவிப்பைக் கேட்ட சஹாபா ஒருவர் மற்றவர் மீது விழுந்தவாறு பைஅத் செய்வதற்காக முண்டியடித்துச் சென்றனர். மேலும் அந்த 1400,1500 முஸ்லிம்கள் இதுவே அப்பொழுது இஸ்லாத்தின் ஒன்று திரண்ட கூட்டமாக இருந்தது. மொத்த முஸ்லிம்கள் (அங்கு) இருந்தனர். ஒவ்வொருவரும் தனித் தனியாகத் தமது அன்பிற்குரிய எஜமானரின் கைகளில், ஒருவகையில் இரண்டாவது முறை விற்றுப் போனார்கள்.

பைஅத் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வலக்கையை இடக்கை மீது வைத்து, இது உஸ்மானின் கையாகும். ஏனெனில் அவர் இங்கு இருந்திருந்தால் இந்தத் தூய வாணிபத்தில் யாரை விட்டும் அவர் பின்தங்கி இருந்திருக்க மாட்டார். ஆனால் தற்பொழுது அவர் இறைவன் மற்றும் அவனுடைய தூதரின் பணியில் மூழ்கியுள்ளார் என்று கூறினார்கள். இவ்வாறு மின்னலைப் போன்ற இந்தக் காட்சி தனது முடிவை எட்டியது.

இஸ்லாமிய வரலாற்றில் இந்த பைஅத் பைஅத்துர் ரிஸ்வான் என்ற பெயரில் பிரசித்தி பெற்றுள்ளது. அதாவது முஸ்லிம்கள் இறைவனின் முழுமையான தன்னிறைவின் வெகுமதியை பெற்ற பைஅத் ஆகும். திருக்குர்ஆனும் இந்த பைஅத்தைப் பற்றி குறிப்பாக கூறியுள்ளது. ஆக அல்லாஹ் கூறுகிறான்:

لَقَدْ رَضِيَ اللّٰهُ عَنِ الْمُؤْمِنِيْنَ اِذْ يُبَايِعُوْنَكَ تَحْتَ الشَّجَرَةِ فَعَلِمَ مَا فِيْ قُلُوْبِهِمْ فَاَنْزَلَ
السَّكِيْنَةَ عَلَيْهِمْ وَاَثَابَهُمْ فَتْحًا قَرِيْبًا

அதாவது நம்பிக்கையாளர்கள் மரத்திற்கு அடியில் உம்மிடம் உடன்படிக்கை செய்து கொண்டபோது நிச்சயமாக அல்லாஹ் அவர்களைக் குறித்து மிக்க மகிழ்ச்சியடைந்து, அவர்களது உள்ளங்களிலிருந்த (நம்பிக்கை)தனை அறிந்து அவர்களுக்குச் சாந்தியை இறக்கி, அண்மையில் வரவிருக்கும் ஒரு வெற்றியினை அவர்களுக்கு வெகுமதியாக வழங்கினான்.

கண்ணியத்திற்குரிய சஹாபிகளும் எப்பொழுதும் இந்த பைஅத்தை மிகவும் பெருமிதத்தோடும் அன்போடும் எடுத்துரைத்து வந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பின்னால் வரக்கூடிய மக்களிடம், நீங்களோ மக்கா வெற்றியை வெற்றியாகக் கருதுகிறீர்கள். ஆனால் நாங்கள் பைஅத்துர் ரிஸ்வானை வெற்றியாகக் கருதி வந்தோம் என்று கூறினர். இந்த பைஅத் அதன் விபரங்களோடு இணைந்து ஒரு மிகவும் மகத்துவமிக்க வெற்றியாக இருந்தது.

அது வருங்கால வெற்றிகளின் கதவுகளை திறந்து விட்டதனால் மட்டுமேயல்ல; மாறாக, அதன் மூலம் ஓர் வகையில் முஹம்மதிய மார்க்கத்தின் மையப் புள்ளியாக உள்ள இஸ்லாத்திற்கு உயிரை அர்ப்பணிக்கும் அந்த ஆன்மா ஒரு கம்பீரமான வடிவில் வெளிப்பட்டது என்பதன் காரணமாகவும் தான். மேலும் இஸ்லாத்திற்காக வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவர்கள், மற்றம் அவர்கள் தமது தூதர் அந்தத் தூதர் கொண்டு வந்துள்ள உண்மைக்காக, ஒவ்வொரு களத்திலும் அந்தக் களத்தின் ஒவ்வோர் அடியிலும் மரணம் மற்றும் வாழ்வுக்கான வாணிபத்துக்காகத் தயாராக உள்ளனர் என்பதைத் தம் செயல்களால் கூறிவிட்டனர். எனவே தான், கண்ணியத்திற்குரிய சஹாபா பைஅத்துர் ரிஸ்வானைப் பற்றி எடுத்துரைத்தவாறு, இந்த பைஅத் மரணிப்பதாக வாக்குறுதி வழங்கக்கூடிய பைஅத்தாக இருந்தது. அதாவது ஒவ்வொரு முஸ்லிமும் இஸ்லாத்திற்காகவும், இஸ்லாத்தின் கண்ணியத்திற்காகவும் தனது உயிரைப் பயணம் வைப்பவரேயொழிய பின்வாங்க மாட்டார் என்ற உறுதிமொழிக்கு பைஅத் செய்தனர் என்று கூறி வந்தனர்.

மேலும் இந்த பைஅத்தின் சிறப்பம்சம் என்னவாக இருந்ததென்றால், இந்த உறுதிமொழி தற்காலிக உத்வேக நிலையில், வெறும் நாவளவில் செய்யப்பட்ட ஒரு தற்காலிக ஒப்புதலாக இருக்கவில்லை. மாறாக உள்ளத்தின் ஆழத்தின் ஓசையாக இருந்தது. அதற்குப் பின் முஸ்லிம்களின் ஒட்டுமொத்த ஆற்றலும் ஒரு மையப் புள்ளியில் ஒன்றிணைந்திருந்தது.

குரைஷியர்களுக்கு இந்த பைஅத் குறித்து தகவல் கிடைத்தபோது, அவர்கள் அச்சமடைந்துவிட்டனர். அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களையும், அவர்கள் உடனிருந்த மக்களையும் விடுவித்து மட்டும் விடவில்லை. மாறாக, தமது தூதுவர்களுக்கும், இப்பொழுது எப்படியாவது முஸ்லிம்களோடு உடன்படிக்கை செய்து கொள்ளுங்கள். ஆனால் இவ்வாண்டுக்குப் பதிலாக அடுத்த ஆண்டு வந்து முஸ்லிம்கள் உம்ராவை நிறைவேற்ற வேண்டும். எவ்வாறிருப்பினும் இந்த ஆண்டு திரும்பிச் சென்று விட வேண்டும் என்ற நிபந்தைனையைக் கண்டிப்பாக வையுங்கள் என்று வழிகாட்டினார்கள்.

மறுபுறம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆரம்பத்திலிருந்தே, நான் இந்த சந்தர்ப்பத்தில் கண்ணியத்திற்குரிய மாதங்கள் மற்றும் பைத்துல்லாஹ்வின் கண்ணியத்திற்கு எதிரான எந்த விஷயத்தையும் செய்ய மாட்டேன் என்று உறுதி எடுத்திருந்தார்கள். இறைவன் அன்னாருக்கு, இந்த சந்தர்ப்பத்தில் குரைஷியர்களோடு செய்யப்படும் சமரசம் வருங்கால வெற்றிகளின் வழித்தடமாக அமையவிருக்கிறது என்று நற்செய்தி வழங்கியிருந்தான்.

எனவே ஒரு வகையில் இரு தரப்பிலும் இந்த சமரச சூழல் ஓர் உன்னதமான சூழலாக இருந்தது. இந்த சூழலிலேயே சுஹைல் பின் அம்ர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் வந்தார். அன்னார் அவரைப் பார்த்தவுடனேயே, இப்பொழுது விவகாரம் எளினமயானவாறு தென்படுகிறது என்று கூறினார்கள். சமாதான பேச்சு வார்த்தை துவங்கியது. சுஹைல் பின் அம்ர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் வந்தபோது, அன்னார் அவரைப் பார்த்தவுடனேயே – ஏற்கனவே கூறப்பட்டபடி, சுஹைல் வருகிறார். இப்பொழுது இறைவன் நாடினால் விவகாரம் எளிமையாகி விடும் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் சுஹைல் வந்தார். வந்தவுடனேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், வாருங்கள். இப்பொழுது நீண்ட விவாதத்தை விட்டு விடுங்கள். நாங்கள் உடன்படிக்கைக்குத் தயாராக உள்ளோம் என்று கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நாங்களும் தயாராக உள்ளோம் என்று கூறினார்கள். இவ்வாறு கூறியவாறு அன்னார் தமது செயலாளர் அலீயை அழைத்தார்கள். அந்த உடன்டிபக்கைக்கான நிபந்தனைகள் கீழ்வருமாறு இருந்தன: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் இந்த ஆண்டு திரும்பிச் சென்று விட வேண்டும். அடுத்த ஆண்டு அவர்கள் மக்கா வந்து உம்ராவுக்கான அம்சங்களை நிறைவேற்றலாம். எனினும் உறையிலிடப்பட்ட வாளைத் தவிர (வேறு) எந்த ஆயுதமும் உடனிருக்கக்கூடாது. மக்காவில் மூன்று நாட்களுக்கு மேல் தங்கக்கூடாது. மக்காவாசிகளில் யாராவது ஓர் ஆண் மதீனா சென்றால், அவர் முஸ்லிமானாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு மதீனாவில் தஞ்சம் அளிக்கக்கூடாது. திருப்பி அனுப்பி விட வேண்டும். ஆனால் எவராவது ஒரு முஸ்லிம் மதீனாவை விட்டு விட்டு மக்கா வந்து விட்டால், அவர் திருப்பி அனுப்பப்பட மாட்டார்.

பிறிதோர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது. மக்கத்தினரில் யாராவது ஒருவர் தமது வலி அதாவது காப்பாளருடைய அனுமதியின்றி மதீனா வந்து விட்டால், அவரைத் திருப்பி அனுப்ப வேண்டும்.

அரபு கோத்திரங்களில், எந்த கோத்திரத்தினர் விரும்பினாலும் முஸ்லிம்களின் தோழமைக் கோத்திரமாகலாம். எந்த கேத்திரத்தினர் விரும்பினாலும் மக்கத்தினரின் தோழமைக் கோத்திரமாகலாம். இந்த உடன்படிக்கை இப்பொழுது பத்து ஆண்டுகள் வரை இருக்கும். மேலும் இந்த காலகட்டத்தில் குரைஷியர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் மத்தியில் போர் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

இந்த உடன்படிக்கைகளின் இரண்டு பிரதிகள் எடுக்கப்பட்டன. சாட்சிகளாக இரு தரப்பின் பல்வேறு கண்ணியத்திற்குரியவர்கள் அவற்றில் கையொப்பமிட்டனர். முஸ்லிம்கள் தரப்பிலிருந்து கையொப்பமிட்டவர்களில், ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் – அவர்கள் அந்த நேரம் வரை மக்காவிலிருந்து திரும்பிவந்து விட்டிருந்தார்கள். அதாவது நிராகரிப்பாளர்கள் அவர்களைத் தடுத்து வைத்திருந்தார்கள். அப்பொழுது விட்டு விட்டார்கள். அவர்களும் அந்த உடன்படிக்கையில் கையொப்பமிட்டார்கள். அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், சஅத் பின் அபீ வக்காஸ் மற்றும் அபூ உபாதா (ஆகியோரும் கையொப்பமிட்டார்கள்). உடன்படிக்கை முடிவடைந்த பிறகு சுஹைல் பின் அம்ர் உடன்படிக்கையின் ஒரு பிரதியை எடுத்துக் கொண்டு மக்காவை நோக்கி திரும்பிச் சென்று விட்டார். இன்னொரு பிரதி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் **749–769)**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த நிகழ்வைத் தமது சொற்பொழிவில் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் கூறுகிறார்கள்: சுற்றுப்புறங்களிலிருந்த சில மக்கள் மக்கத்தினரிடம், இந்த மக்கள் தவாஃப் செய்வதற்காக மட்டுமே வந்திருக்கிறார்கள். ஆனால் மக்கத்தினர் தங்கள் பிடிவாதத்தில் உறுதியாக நின்றனர். இதனைக் கண்ட வெளிக் கோத்திரங்களைச் சார்ந்த மக்கள் மக்கத்தினரிடம் உங்களுடைய இந்த நடைமுறை நீங்கள் தீமை செய்வதைத்தான் நோக்கமாகக் கொண்டிருக்கிறீர்கள். சமாதானத்தை அல்ல என்பதையே காட்டுகிறது. எனவே நாங்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு தரத் தயாராக இல்லை என்றனர்.

இது ஒரு புதிய விஷயம் ஆகும். அதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். அதாவது சுற்றுப்புறத்திலிருந்த கோத்திரங்களுடைய அழுத்தமும் இருந்தது. இதனால் மக்கத்தினர் பயந்து விட்டனர். அவர்கள் முஸ்லிம்களுடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்கு முயற்சி செய்வார்கள் என்று இணக்கம் தெரிவித்தனர். இந்தச் செய்தியைக் குறித்த தகவல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்ததும், பிற்காலத்தில் அன்னாருடைய மூன்றாவது கலீஃபாவான ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை மக்கத்தினருடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்காவுக்குச் சென்றபோது, மக்காவில் அவர்களுக்கு மிக அதிகமான உறவினர்கள் இருந்ததால், அவர்களின் உறவினர்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டு, தாங்கள் தவாஃப் செய்து கொள்ளுங்கள். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் அடுத்த ஆண்டில் வந்து தவாஃப் செய்து கொள்ளட்டும் என்றனர். ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் என்னுடைய எஜமானர் இன்றி என்னால் தவாஃப் செய்ய முடியாது என்றார்கள்.

அவர்கள் மக்காவின் தலைவர்களுடன் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்ததால் மக்காவிலுள்ள சிலர் தீய எண்ணங்கொண்டு, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்ற செய்தியைப் பரப்பி விட்டார்கள். இந்தச் செய்தி பரவி பரவி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரை சென்றடைந்தது.

இதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சஹாபிகளை ஒருங்கிணைத்து, எல்லாச் சமுதாயங்களிலும் அரசு தூதரின் உயிர் பாதுகாக்கப்படுகிறது. உஸ்மான் அவர்களை மக்கத்தினர் கொன்று விட்டார்கள் என்ற செய்தியினை நீங்கள் கேள்விப்பட்டுள்ளீர்கள்.

இந்தச் செய்தி உண்மையானதென்றால், நாம் வலுக்கட்டாயமாக மக்காவிற்குள் நுழைவோம். அதாவது மக்காவிற்குள் நாம் சுமூகமாக நுழைய வேண்டும் என்ற நம்முடைய முதல் நோக்கம், எந்த நிலைமைகளின் அடிப்படையில் அமைந்திருந்ததோ அந்த நிலைமைகள் தற்போது மாறி விடும். எனவே நாம் இப்பொழுது அந்த நோக்கத்திற்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்க மாட்டோம். ஆகவே நாம் இங்கிருந்து முன்னேறிச் செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டால், ஒன்று நாம் மக்காவை வென்றே திரும்புவோம். அல்லது ஒவ்வொருவராகப் போர்க்களத்தில் மடிவோம் என்ற உறுதிமொழிக்கு ஆயத்தமாக இருப்பவர்கள், என்னிடம் பைஅத் (உறுதிமொழி) செய்யுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவித்ததும் அவர்களுடன் சென்றிருந்த 1500 பயணிகளும் 1500 போர் வீரர்களாக மாறி விட்டனர். அவர்கள் பித்தர்களைப் போன்று ஒருவர் மற்றவர் மீது முண்டியடித்துக் கொண்டு மற்றவர்களுக்கு முன்னதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கையில் பைஅத் செய்ய முயன்றனர்.

இந்தப் பைஅத் முழு இஸ்லாமிய வரலாற்றிலும் மிகப்பெரும் முக்கியத்துவம் வகிக்கிறது. இது மரத்தின் உறுதிமொழி என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் இந்த பைஅத் வாங்கப்பட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்திருந்தார்கள். இந்த பைஅத்தில் கலந்து கொண்டவர்களில் கடைசி மனிதர் உலகில் உயிரோடு இருந்தவரை அவர் பெருமிதத்தோடு இதை எடுத்துரைத்து வந்தார். ஏனெனில் 1500 பேரில் ஒருவர் கூட இந்த உறுதிமொழியினை எடுத்துக் கொள்ள தவறவில்லை. பகைவர்கள், இஸ்லாமிய தூதரைக் கொன்று விட்டார்கள் என்றால், இன்று இரண்டு சூழ்நிலைகளில் ஒன்றை கட்டாயம் ஏற்படுத்தியே தீர வேண்டும். ஒன்று, அவர்கள் மாலைக்குள் மக்காவை வென்று விடுவார்கள். அல்லது மாலைக்குள் போர்க்களத்தில் கொல்லப்படுவார்கள் (என்ற உறுதிமொழியை அவர்கள் அனைவரும் எடுத்துக் கொண்டார்கள்).

முஸ்லிம்கள் இந்த உறுதிமொழியை எடுத்து முடித்த உடனேயே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் திரும்பி வந்து விட்டார்கள். மக்கத்தினர் இந்த ஆண்டு உம்ரா செய்ய அனுமதிக்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் அடுத்த ஆண்டு அனுமதி தர தயாராக உள்ளனர். ஆக இதற்காக உடன்படிக்கை செய்ய அவர்கள் தங்களுடைய பிரதிநிதியை நியமித்துள்ளனர் என்று அன்னார் கூறினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வந்து சிறிது நேரத்திற்குப் பிறகு மக்காவின் ஒரு தலைவரான சுஹைல் என்பவர் உடன்படிக்கை செய்து கொள்வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். இந்த உடன்படிக்கை எழுதப்பட்டது.

இப்பொழுது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் இந்தக் குறிப்பு சென்று கொண்டிருக்கிறது. இனி வருங்காலங்களில் எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி **20** பக்கம் **307,308)**

தற்போதும் நான் துஆக்களின் பால் கவனமூட்ட விரும்புகிறேன். பாகிஸ்தானின் நிலைமைக்காக குறிப்பாக துஆ செய்யுங்கள். இப்பொழுது வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளும் பாதுகாப்பாக இல்லை. தமது இடங்களிலும் பாதுகாப்பாக இல்லை. எல்லா இடங்களிலும் மவ்லவி கூற, காவல்துறையினர் சென்றடைந்து விடுகின்றனர். சில நல்லியல்பு கொண்ட காவல்துறையினரும் உள்ளனர். அவர்கள் எங்களுக்கு உங்கள் மீது அனுதாபம் இருக்கிறது. ஆனால் நாங்கள் என்ன செய்ய? எங்களுக்கு எந்த அளவு அழுத்தம் கொடுக்கப்படுகிறது என்றால், எங்கள் அதிகாரிகள் சொல்வதை நாங்கள் செய்ய வேண்டியுள்ளது என்று கூறுகின்றனர்.

ஆக அல்லாஹ் இத்தகைய தீய இயல்புடைய அதிகாரிகளிடமிருந்தும் நம்மைக் காப்பாற்றுவானாக. நாட்டைக் காப்பாற்றுவானாக. ஒவ்வோர் அஹ்மதிக்கும் சுதந்திரமாகவும் பாதுகாப்பான வழிமுறையிலும் தனது நாட்டில் வசிக்க நல்வாய்ப்பு வழங்குவானாக. குறிப்பாக துஆ செய்து வாருங்கள். இந்த துஆக்கள் தொடர்ந்து கொண்டிருந்தால், விரைவாக எதிரிகளின் முடிவு மிகவும் படிப்பினைக்குரியதாக அமைவதை நாம் காண்போம். இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் நமக்கு துஆக்கள் செய்வதற்கு நல்வாய்ப்பும் வழங்குவானாக. அவற்றை ஏற்றுக் கொள்வானாக.

(தமிழில்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது சாஹிப்)


**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை
வணங்குவதற்காகவே படைத்துள்ளோம். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில்
கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா மற்றும் துன் நூரைன் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய பண்புகளின் நற்குறிப்புகள்

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஅல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டண் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 05 பிப்ரவரி 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **05 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் பங்கு பெற்ற போர்கள் தொடர்பான நற்குறிப்பு நடைபெற்று வருகின்றது. ஸாதுர் ரிகா என்ற ஒரு போர் நடைபெற்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நஜத் எனும் இடத்தில் கத்ஃபானுடைய கோத்திரமான பனூ சஃலபா மற்றும் பனூ முஹாரிப் மீது தாக்குதல் நடத்துவதற்காக 400 சஹாபிகளை அல்லது ஓர் அறிவிப்பின் அடிப்படையில் 700 சஹாபிகளை ஒன்றுகூட்டிக் கொண்டு புறப்பட்டார்கள். மதீனாவில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை அமீராக நியமனம் செய்தார்கள். மற்றோர் அறிவிப்பின்படி ஹஸ்ரத் அபூஸர் கஃப்ஃபாரி அவர்களை அமீராக நியமனம் செய்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸாதுர் ரிகா என்று அழைக்கப்படக்கூடிய நஹல் என்ற இடத்தை அடைந்தார்கள். அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எதிர்கொள்வதற்கு ஒரு பெரும் படை ஆயத்தமாக இருந்தது. இரண்டு கூட்டத்தினரும் ஒருவர் மற்றவரை எதிர் கொண்டனர். ஆயினும் போர் நடைபெறவில்லை. இந்த போருக்கு மத்தியில் முதல் முறையாக முஸ்லிம்கள் ஸலாத்துல் கவ்ஃப் எனும் தொழுகையை நிறைவேற்றினர்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 280 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாஅத் தராஸூல் அரபியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி அவர்கள் அறிவிக்கின்றார்கள். நாங்கள் ஒரு போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் புறப்பட்டோம். நாங்கள் 600 நபர்கள் இருந்தோம். எங்களிடம் ஒரு பொதுவான ஒட்டகம் இருந்தது. அதில் ஒவ்வொருவராக பயணித்துக் கொண்டிருந்தோம். எங்களது பாதங்கள் வெடித்து விட்டன. அதாவது போரில் 6 நபர்கள் அந்த ஒட்டகத்தில் இருந்தார்கள். எனது இரண்டு பாதங்களும் வெடித்து விட்டன. மேலும் எனது நகங்கள் விழுந்து விட்டன. மேலும் நாங்கள் எங்களது பாதங்களில் துணிகளின் சிறிய துண்டுகளை கட்டிக் கொண்டோம். எனவே இந்தப் போருக்கு ஸாதுர் ரிகா என்று பெயரிடப்பட்டது. ஏனென்றால் நாங்கள் துணிகளின் துண்டுகளால் எங்களது கால்களை கட்டியிருந்தோம். (சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி, கஸ்வாத்துர் ரிகாஹ் ஹதீஸ் எண் 4128)

இங்கு ஒரு குறிப்பு உள்ளது. அதையும் நான் எடுத்துரைக்கின்றேன். வரலாற்று புத்தகங்களின் அடிப்படையில் ஸாதுர் ரிகா போர் ஹிஜ்ரி 4ஆம் ஆண்டு நடைபெற்றது. அதே நேரம் இமாம் புகாரி அவர்கள், கைபர் போருக்கு பிறகு இந்தப் போர் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி அவர்கள் இந்தப் போரில் பங்கு பெற்றிருந்தார்கள். மேலும் அன்னார் கைபர் போருக்குப் பிறகு தான் முஸ்லிமாகி இருந்தார்கள். எனவே ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு இந்தப் போர் நடைபெற்றதாக பெரும்பாலானவர்கள் கருதுகின்றார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 280 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருர் அஹ்யாஅத் தராஸூல் அரபியில் அச்சிடப்பட்டது)

மக்கா வெற்றி தொடர்பான அறிவிப்புகளில் ஓர் அறிவிப்பு உள்ளது. சுனன் நிஸாயி ஹதீஸ் புத்தகத்தில் ஒரு விரிவான அறிவிப்பு இவ்வாறு இடம் பெற்றுள்ளது. அதில் மக்கா வெற்றி சந்தர்ப்பத்தின்போது யாரையெல்லாம் கொலை செய்ய வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சார்பாக கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்ததோ அந்த நபர்களின் விபரங்கள் அந்த அறிவிப்பில் இடம் பெற்றுள்ளது.

ஹஸ்ரத் முஸ்அப் பின் சமத் அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: மக்கா வெற்றியின் நாளின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 4 ஆண்கள் மற்றும் 2 பெண்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து நிராகரிப்பாளர்களுக்கும் பாதுகாப்பு வழங்கியிருந்தார்கள். அந்த 4 நபர்களை கொலை செய்யுங்கள். அவர்கள் கஃபாவின் திரைச்சீலைகளில் ஒளிந்திருப்பதை நீங்கள் கண்டாலும் கொலை செய்து விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள். அவர்களின் பெயர்கள் இக்ரிமா பின் அபூ ஜஹில், அப்துல்லாஹ் பின் கதல், மகீஸ் பின் கபாபா மற்றும் அப்துல்லாஹ் பின் சஅத் பின் அபி தரா ஆகும்.

அப்துல்லாஹ் பின் கதல் கைது செய்யப்பட்டபோது அவர் இவ்வாறு கூறினார்: கடலில் என்னை ஏதாவது ஒன்று என்னை காப்பாற்றும் என்றால் அது கலப்பற்ற தன்மை மற்றும் உண்மையே ஆகும். நிலத்திலும் கலப்பற்ற தன்மையும், உண்மையும் மட்டுமே என்னை காப்பாற்றும். அல்லாஹ்வே! நான் உன்னுடன் உறுதியான உடன்படிக்கை செய்கின்றேன். நீ என்னை புயலிலிருந்து காப்பாற்றி விட்டால் நான் நிச்சயமாக முஹம்மது (ஸல்) அவர்களிடம் சென்று அவர்களின் கரங்களில் எனது கரத்தை வைத்து விடுவேன். மேலும் நான் நிச்சயமாக அன்னாரை மன்னிப்பவராகவும், கண்ணியமிக்கவராகவும் காண்பேன். பின்னர் அன்னார் திரும்பி வந்தார்கள். மேலும் அவர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார்.

இது தொடர்பாக பிரபலமான ஓர் அறிவிப்பு உள்ளது. அவர் கப்பலில் ஏறுவதற்கு முன்பாகவே அவரது மனைவி அவரிடம் சென்று அவரை உண்மையை ஏற்றுக் கொள்ளச் செய்தார். மேலும் அவரை திரும்பி அழைத்து வந்தார். இந்த அறிவிப்பும் பின்னர் வரும். எவ்வாறிருப்பினும் சுனன் நிஸாயின் ஓர் அறிவிப்பு இவ்வாறு உள்ளது. அப்துல்லாஹ் பின் அபீ ஸராஹ் அவர்களைப் பொருத்தவரை அவர் உஸ்மான் பின் அத்ஃபான் அவர்களிடம் ஒளிந்து கொண்டார். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களை பைஅத் செய்வதற்கு அழைத்தபோது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் கொண்டு வந்தார்கள். அல்லாஹ்வின் தூதரே! அப்துல்லாஹ்வின் பைஅத்தை ஒப்புக் கொள்வீர்களா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது தலையை உயர்த்தி மூன்று முறை அவனை உற்று நோக்கினார்கள். மூன்று முறையும் நிராகரித்து விட்டார்கள். எவ்வாறிருப்பினும் இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் பைஅத் வாங்கினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இவரை கொலை செய்யக்கூடிய மனிதர் யாரும் இருந்திருக்கவில்லையா? இவரிடம் பைஅத் பெறுவதை நான் தவிர்த்து வந்தேன். தங்களின் உள்ளத்தில் என்ன இருக்கிறது என்று எங்களுக்கு எப்படி தெரியும்? என்று அன்னார் கூறினார். தாங்கள் ஏன் கண்களால் எங்களிடம் சைகை செய்யவில்லை. கண்களால் நம்பிக்கை துரோகம்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

செய்வது நபிக்கு ஆகுமானதல்ல என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இந்த அறிவிப்பு சுனன் அபூ தாவூதிலும் உள்ளது. சுனன் அபூ தாவூதில் மற்றோர் அறிவிப்பும் இடம் பெற்றுள்ளது. எனினும் அந்த அறிவிப்பின் கடைசி வாக்கியங்களில் அவரை கொலை செய்வதற்கான எந்த குறிப்பும் இடம் பெறவில்லை. எனவே இந்த அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அப்துல்லாஹ் பின் சஅத் பின் அபீ ஸரா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எழுத்தாளராக இருந்தார். அவரை ஷய்த்தான் வழிகெடுத்தான். அவர் நிராகரிப்பாளர்களுடன் சென்று இணைந்து கொண்டார். மக்கா வெற்றி நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை கொலை செய்ய கூறியிருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் பின் கத்ஃபான் அவர்கள் அவருக்காக அடைக்கலம் வேண்டினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவருக்கு அடைக்கலம் வழங்கினார்கள்.

(சுனன் நிஸாயி, கிதாபுல் மஜாரிஆ.. ஹதீஸ் எண் 4072)

இவரைக் கொலை செய்திருக்க வேண்டும்? ஆனால் ஏன் கொலை செய்யவில்லை? என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குறிப்பு தொடர்பாக ஒரு விளக்கமும் இடம் பெற்றுள்ளது. அறிவிப்பில் நான் பைஅத் வாங்குவதிலிருந்து தாமதித்து வந்தபோது நீங்கள் இவரை கொலை செய்திருக்க வேண்டும். ஆனால் நீங்கள் ஏன் அவ்வாறு செய்யவில்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபிகளிடம் கூறி வந்தார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பைஅத் வாங்க விரும்பியிருக்கவில்லை என்றால் மேலும் அவரைக் கொலை செய்திருக்க வேண்டும் என்ற முடிவில் நிலைபெற்றிருந்தால் அவரை கொலை செய்வதற்கு கட்டளையிட்டிருப்பார்கள். அன்னார் வெற்றியாளராக இருந்தார்கள். நாட்டின் அதிபராக இருந்தார்கள். அவரை கொலை செய்ய வேண்டும் என்ற தீர்ப்பும் கூட நீதியை அடிப்படையாக கொண்டதாக இருந்தது. எனவே அந்த அறிவிப்பில் அறிவிப்பாளரின் தனது சொந்த கருத்தோ அல்லது அறிவிப்போ கலந்திருக்கலாம். மேலும் அந்த அறிவிப்பு புகாரி மற்றும் முஸ்லிம் புத்தகங்களில் இடம் பெறவில்லை.

அபூ தாவூதில் இதே கட்டுரை தொடர்பாக ஓர் அறிவிப்பை ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் செய்கின்றார்கள். அதைப் பற்றி கூறப்பட்டு விட்டது. அதில் கொலை செய்வது தொடர்பாக எந்த குறிப்பும் இடம் பெறவில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அல் மூமினீன் என்ற அதிகாரத்தின் 15வது வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இந்த சம்பவத்தை இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்: இந்த வசனத்துடன் ஒரு வரலாற்று சம்பவமும் தொடர்புடையதாக உள்ளது. அதனை இங்கு குறிப்பிடுவதை அவசியமானதாக நான் கருதுகின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வஹீ எழுதக்கூடிய ஒரு நபர் இருந்தார். அவரது பெயர் அப்துல்லாஹ் பின் அபீ ஸரா ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏதாவது வஹீ இறங்கும்போது அன்னார் அவரை அழைத்து வஹீயை எழுதச் செய்து விடுவார்கள்.

ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதே வசனங்களை அவரைக் கொண்டு எழுதிக் கொண்டிருந்தார்கள். அன்னார் ثُمَّ اَنْشَاْنٰهُ خَلْقًا اٰخَرَ என்ற வசனத்தை அடைந்தபோது அவரது வாயிலிருந்து அவரையும் அறியாமல் فَتَبَارَكَ اللّٰهُ اَحْسَنُ الْخَالِقِيْنَ என்ற வசனம் வெளிப்பட்டது. இதுவே வஹீ ஆகும். இதை எழுதி விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் கூறினார்கள். முந்தைய வசனங்களின் தாக்கத்தின் விளைவாக அது தானாகவே வெளிப்பட்டு விட்டது என்ற எண்ணம் அந்த தீயவனுக்கு தோன்றவில்லை. மாறாக, எனது வாயிலிருந்து வசனம் வெளிப்பட்டது. அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வஹீயாக ஆக்கிவிட்டார்கள். நவூதுபில்லாஹ் இது போன்றே அன்னார் முழு குர்ஆனையும் உருவாக்கிக் கொண்டார்கள் என்று அவர் கருதிக் கொண்டார். எனவே அவர் முர்ததாகி விட்டார். மேலும் மக்கா சென்று விட்டார்.

மக்கா வெற்றி கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவரையெல்லாம் கொலை செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார்களோ அவர்களில் ஒருவராக அப்துல்லாஹ் பின் அபீ ஸரா இருந்தார். ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அவருக்கு அடைக்கலம் கொடுத்து விட்டார்கள். அன்னாரது வீட்டில் அவர் மூன்று நாட்கள் ஒளிந்திருந்தார். ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களிடம் பைஅத் வாங்கிக் கொண்டிருந்தபோது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், அப்துல்லாஹ் பின் அபீ ஸராவையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அழைத்துச் சென்றார்கள். அவரின் பைஅத்தை பெற்றுக் கொள்ளுமாறு கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் சற்று தாமதித்தார்கள். ஆயினும் அவரிடம் பைஅத் வாங்கிக் கொண்டார்கள். இவ்வாறு அவர் இரண்டாவது முறையாக இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 139)

சுனன் நிஸாயியில் இடம் பெற்றுள்ள அறிவிப்பில் இக்ரிமா பின் அபூ ஜஹில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவமும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. வாழ்க்கை வரலாற்று புத்தகங்களிலும் அவர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவம் விளக்கமாக இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நான் இதற்கு முன்பும் அதை குறிப்பிட்டுள்ளேன். இக்ரிமா பின் அபூ ஜஹில் மக்கா வெற்றி கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொலை செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டிருந்த நபர்களை சார்ந்தவராக இருந்தார். இக்ரிமா மற்றும் அவரது தந்தை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் தொல்லைகள் கொடுத்து வந்தனர். மேலும் முஸ்லிம்களின் மீது அதிக கடினம் காட்டி வந்தனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரை கொலை செய்ய வேண்டும் என்று கட்டளை பிறப்பித்துள்ளார்கள் என்பது அவருக்கு தெரிய வந்தபோது அவர் யமன் நாட்டை நோக்கி ஓடி விட்டார். அவரது மனைவி அவரை பின்தொடர்ந்து சென்றார். அதன் விளைவாக அவர் இஸ்லாத்தையும் ஒப்புக் கொண்டு விட்டார்.

இக்ரிமா கடற்கரை ஓரத்தில் இருப்பதை அவரது மனைவி கண்டார். அவர் படகில் சவாரி செய்வதற்கு எண்ணிக் கொண்டிருந்தபோது ஒரு கூற்றின் அடிப்படையில் அவரது மனைவி அவரை அங்கு கண்டு கொண்டார். அவர் படகில் ஏறி அமர்ந்திருந்தார். எனது சிறிய தந்தையாரின் மகனே! மக்களை அதிகமாக இணைப்பவரும், மக்களில் மிக அதிகமாக நல்லவரும் மற்றும் மக்களில் எல்லாரையும் விட அதிகமாக பிறருக்கு நன்மையை விரும்புபவருமாகிய ஒரு நபரிடமிருந்து நான் உங்களிடம் வந்துள்ளேன். நீர் உம்மை அழிவிற்குள்ளாக்கிக் கொள்ளாதீர். ஏனென்றால் நான் உமக்காக அடைக்கலம் பெற்று வந்துள்ளேன் என்று கூறி அவர் அவரை தடுத்து நிறுத்தினார். அப்போது அவர் தனது மனைவியுடன் வந்தார். மேலும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார். மேலும் அவருக்கு அழகிய இஸ்லாம் கிடைத்தது.

அறிவிப்பில் வருகின்றது. இக்ரிமா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து நின்றார். அப்போது முஹம்மத் (ஸல்) அவர்களே! தாங்கள் எனக்கு அடைக்கலம் வழங்கி விட்டதாக எனது மனைவி என்னிடம் கூறினார். அப்போது நீர் உண்மை கூறியுள்ளீர். நிச்சயமாக நீர் பாதுகாப்பில் இருக்கின்றீர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனுமில்லை. அவன் ஏகன். அவனுக்கு இணை ஏதும் இல்லை என்றும், தாங்கள் அவனுடைய அடியாரும், தூதரும் ஆவீர்கள் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன் என்று இக்ரிமா கூறினார். மேலும் அவர் வெட்கத்தால் தனது தலையை கீழே தாழ்த்திக் கொண்டார். அப்போது இக்ரிமாவே! நீ என்ன வேண்டுமானாலும் என்னிடம் கேளும். அது எனது ஆற்றலுக்கு உட்பட்டதாக இருக்குமென்றால் நிச்சயமாக நான் உமக்கு தந்து விடுவேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அப்போது நான் உங்கள் மீது கொண்டிருந்த எனது அனைத்து பகைமையும் மன்னிக்கப்படுவதற்கு நீங்கள் துஆ செய்ய வேண்டும் என்று இக்ரிமா வேண்டினார். அப்போது அல்லாஹ்வே! என்னுடன் இக்ரிமா கொண்டிருந்த அனைத்து பகைமையையும் அல்லது அவர் எனக்கு செய்த அனைத்து தீங்கையும் நீ மன்னித்து விடுவாயாக என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள்.

### திருக்குர்ஆனிலிருந்து...

எங்கள் இறைவா! எங்கள் (குறைபாடுகளாகிய) குற்றங்களையும், எங்கள் செயல்களில் எங்களின் வரம்புமீறுதகல்களையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக. எங்கள் காலடிகளை உறுதிப்படுத்துவாயாக. மேலும் நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக, எங்களுக்கு உதவி செய்வாயாக என்று கூறியதைத் தவிர அவர்கள் எதுவும் கூறியதில்லை. (3:148)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் தனது தலையை உயர்த்தினார்கள். மேலும் தனது போர்வையை அவர் மேல் போர்த்தினார்கள். மேலும் ஈமான் கொண்ட நிலையிலும், ஹிஜ்ரத் செய்த நிலையிலும் எம்மிடம் வந்த நபரின் வருகை நல்வரவு ஆகட்டுமாக என்று கூறினார்கள். பிற்காலத்தில் இக்ரிமா அவர்கள் மிகவும் கம்பீரமிக்க சஹாபிகளில் கணக்கிடப்பட்டார். இக்ரிமா ஈமான் கொண்டதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சஹாபியிடம் கூறியிருந்த அந்த முன்னறிவிப்பும் முழுமையடைந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தான் சுவர்க்கத்தில் இருப்பதாக கனவில் கண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு திராட்சை பழத்தின் ஒரு கொத்தை கண்டார்கள். அது அன்னாருக்கு மிகவும் பிடித்திருந்தது. இது யாருக்காக என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அப்போது அபூஜஹ்லுக்கு என்று கூறப்பட்டது. இந்த விஷயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நல்லதாக படவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் கவலையடைந்தார்கள். பின்னர் சுவர்க்கத்தில் நம்பிக்கையாளர்களைத் தவிர்த்து வேறு எவரும் நுழைய முடியாது. அவ்வாறிருக்க அபூஜஹ்ல் எப்படி என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேள்வி கேட்டார்கள். இக்ரிமா பின் அபீஜஹ்ல் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுற்றார்கள். அந்த திராட்சை கொத்து என்பதற்குரிய விளக்கமாக இதன் பொருள் இக்ரிமா ஆவார் என்று அன்னார் கூறினார்கள்.

(அஸ்ஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 132,133 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தபூக் போர் ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு ரஜப் மாதத்தில் நடைபெற்றது. இந்த தபூக் போரை ஜைஷுல் உஸ்ரா என்றும் கூறுவார்கள். அதாவது கடினத்தை கொண்ட படை என்பது பொருளாகும். போருக்கு ஆயத்தமாவதற்காக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு பொருள் தியாகம் மூலம் தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்தது. அது தொடர்பான குறிப்பு இவ்வாறு வந்துள்ளது. தபூக் போருக்கு ஆயத்தமாவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளை பிறப்பித்தார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வியாபார நோக்கத்தின் அடிப்படையில் தான் தயார் செய்து வைத்திருந்த 100 ஒட்டகங்களின் குழுவை அப்படியே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கொடுத்து விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மீண்டும் பொருள் தியாகம் செய்யுமாறு கூறினார்கள். அப்போது அந்த போரின் தேவையை கருத்தில் கொண்டு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மேலும் 100 ஒட்டகங்களை ஆயத்தம் செய்து கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீண்டும் கட்டளையிட்டார்கள். அப்போது மூன்றாவது முறையாக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மேலும் 100 ஒட்டகங்களை முன் வைத்து விட்டார்கள்.ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொற்பொழிவு மேடையிலிருந்து கிழே இறங்கி வந்தார்கள்.

அன்னார் கூறினார்கள்:

مَا ضَرَّ عُثْمَانَ مَا عَمِلَ بَعْدَ الْيَوْمِ அதாவது இதற்குப் பிறகு உஸ்மான் என்ன செய்தாலும் அது பற்றி கேள்வி கேட்கப்பட மாட்டாது. அதுமட்டுமின்றி உஸ்மான் அவர்கள் 200 அவ்கியா அளவிலான தங்கத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன் வைத்து விட்டார்கள்.

மற்றோர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வருகை தந்து ஓராயிரம் தீனாரை அன்னாரின் சட்டைப் பையில் வைத்து விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பையில் இருந்த தீனார்களை இங்கும் அங்கும் உருட்டிக் கொண்டிருந்தார்கள். பின்னர் இரண்டு முறை مَا عَلٰى عُثْمَانَ مَا عَمِلَ بَعْدَ هٰذِهٖ۔ مَا عَلٰى عُثْمَانَ مَا عَمِلَ بَعْدَ هٰذِهٖ என்று கூறினார்கள். அதாவது இன்று முதல் உஸ்மான் என்ன செய்தாலும் அவருக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அந்த சந்தர்ப்பத்தில் 10000 தீனார்கள் வழங்கியிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்காக இவ்வாறு துஆ செய்தார்கள்.

غَفَرَ اللهُ لَكَ يَا عُثْمَانُ مَا اَسْرَرْتَ وَمَا اَعْلَنْتَ وَمَا هُوَ كَائِنٌ اِلٰى يَوْمِ الْقِيَامَةِ مَا يُبَالِيْ مَا عَمِلَ بَعْدَهَا

உஸ்மானே! அல்லாஹ் உம்முடன் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக. நீர் மறைவில் செய்த பாவங்களை மன்னிப்பானாக. மேலும் வெளிப்படையாக செய்த பாவங்களையும் மன்னிப்பானாக. மேலும் கியாமத் வரை நடைபெறுபவற்றையும் மன்னிப்பானாக. இதன் பிறகு அவர் என்ன செய்தாலும் அவர் கவலை கொள்ளக்கூடாது.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் போரின் ஏற்பாட்டிற்காக ஓராயிரம் ஒட்டகங்களையும், 70 குதிரைகளையும் வழங்கினார்கள்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: உஸ்மானே! நீங்கள் மறைவாக செய்தவற்றையும், வெளிப்படையாக செய்தவற்றையும், கியாமத் வரை நடைபெறுவதையும் அல்லாஹ் மன்னித்தருள்வானாக. இந்த செயலுக்கு பிறகு உஸ்மான் என்ன செய்தாலும் அல்லாஹ் அதனை பொருட்படுத்த மாட்டான்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறும் துஆ செய்தார்கள்.

اَللّٰهُمَّ ارْضِ عَنْ عُثْمَانَ فَاِنِّيْ عَنْهُ رَاضٍ

அல்லாஹ்வே! உஸ்மானின் மீது திருப்தி கொள்வாயாக. ஏனெனில் நான் அவர் மீது திருப்தி கொண்டுள்ளேன்.

(ஷரஹ் ஸர்கானீ... தொகுதி 4 பக்கம் 66,68–71 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: சஹாபிகள் சில முறை தனது வீட்டிலிருந்த செல்வங்கள் மற்றும் பொருட்களை எல்லாம் விற்று போருக்கான செலவீனங்களை முழுமை செய்து வந்தார்கள். சில முறை தங்களது சொத்துக்களை விற்று பிறருக்கு செலவிட்டு வந்தார்கள். மேலும் அவர்களுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தார்கள். எனவே ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியே வந்தார்கள். மேலும் இன்ன பயணத்தில் நமது படை செல்ல இருக்கிறது என்று கூறினார்கள். ஆனால் நம்பிக்கையாளர்களிடம் எந்தப் பொருளும் இருக்கவில்லை. உங்களில் நற்கூலி பெறுபவர் இருக்கின்றாரா? என்று கேட்டார்கள். அதைக்கேட்ட உடன் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் தனது தலையை உயர்த்தினார்கள். மேலும் முஸ்லிம்களின் செலவீனங்களுக்காக தம்மிடமிருந்த அனைத்தையும் கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதைப் பார்த்தபோது, உஸ்மானே! நீர் சுவர்க்கத்தை வாங்கி விட்டீர் என்று கூறினார்கள்.

இதேபோன்று ஒரு முறை ஒரு கிணறு விற்பனைக்கு வந்தது. அந்த நாட்களில் தண்ணீர் பஞ்சம் கடுமையாக இருந்தது. எனவே நற்கூலி பெறக்கூடியவர் யாரும் இருக்கின்றாரா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். எனவே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதரே! நான் இருக்கின்றேன். நான் இருக்கின்றேன் என்று கூறினார்கள். இவ்வாறு அன்னார் அந்த கிணற்றை விலைக்கு வாங்கி முஸ்லிம்களுக்கு அதை அர்ப்பணித்து விட்டார்கள். உஸ்மான் சொர்க்கத்தை வாங்கிக் கொண்டார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இதேபோன்று மேலும் ஒரு சந்தர்ப்பத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தொடர்பாக இதே சொற்களை கூறியுள்ளார்கள். சுருக்கமாக, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றி அவர் சுவர்க்கத்தை விலைக்கு வாங்கிக் கொண்டார் என்று 3 சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 19 பக்கம் 98,99 குத்பா ஜுமுஆ 18 பிப்ரவரி 1938)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தொடர்பாக அன்னார் சுவர்க்கத்தை விலைக்கு வாங்கிக் கொண்டார். மேலும் அவர் சுவர்க்கவாசி என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல முறை கூறி வந்துள்ளார்கள்.

ஹுதைபியா உடன்படிக்கை சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களிடம் மீண்டும் பைஅத் வாங்கினார்கள்.

அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அங்கு இருந்திருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கரத்தை தமது மற்றொரு கரத்தின் மீது வைத்து இது உஸ்மானின் கை ஆகும் என்று கூறினார்கள். மேலும் நான் அவர் சார்பாக எனது கரத்தை மற்றொரு கையின் மீது வைக்கின்றேன் என்று கூறினார்கள். இவ்வாறு தமது கரத்தை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கரமாக அன்னார் குறிப்பிட்டு விட்டார்கள்.

பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: உஸ்மானே! உமக்கு அல்லாஹ் ஓர் ஆடையை அணிவிப்பான். அந்த ஆடையை உம்மிடமிருந்து கழற்றி விட வேண்டும் என்று நயவஞ்சகர்கள் விரும்புவார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 19 பக்கம் 100 குத்பா ஜுமுஆ 18 பிப்ரவரி 1938)

எனவே அப்படி விரும்பிய நபர்கள் அனைவரும் நயவஞ்சகர்களாக இருந்தார்கள் என்பது வெளிப்படையாகும். ஏனெனில் இந்த முன்னறிவிப்பை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே செய்திருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தியாகம் தொடர்பாக ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: போருக்கான தேவைகள் இருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபிகளுக்கு முன்னால் தேவைகளை எடுத்துரைத்தார்கள். பொருள் தியாகம் செய்வதற்கு அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அதன் விளைவாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தனது அனைத்து செல்வத்தையும் எடுத்து வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது வீட்டிலிருந்து பாதி செல்வத்தை எடுத்து வந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எனது இந்த விஷயத்தை ஒப்புக் கொள்ளுங்கள். நான் சஹாபிகளுக்கான செலவீனங்களை ஏற்றுக் கொள்கின்றேன். அதுமட்டுமின்றி அன்னார் ஓராயிரம் ஒட்டகங்களையும், எழுபது குதிரைகளையும் கொடுத்து விட்டார்கள்.

(குத்பாத்தே நாஸிர்தொகுதி 2 பக்கம் 341 குத்பா ஜுமுஆ 18 அக்டோபர் 1968)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் எவ்வாறு நடந்து கொண்டார்கள்? மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பார்வையில் அன்னாருக்கு எந்த அந்தஸ்து இருந்தது? என்று பார்ப்போம். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களில் கருத்து கேட்கப்படும் சஹாபிகளைச் சார்ந்தவராகவும், ஆலோசனை வழங்கக்கூடியவராகவும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முர்தத்களின் குழப்பங்களை எதிர்கொண்டு அதற்கு முடிவு கட்டினார்கள். அப்போது ரோம் நாட்டின் மீது படையெடுப்பதற்கும், பல்வேறு திசைகளில் முஜாஹித்களை அனுப்பி வைப்பதற்கும் எண்ணம் கொண்டார்கள். இது தொடர்பாக மக்களிடம் ஆலோசனை கேட்டார்கள். சில சஹாபிகள் ஆலோசனை வழங்கினர். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மேலும் ஆலோசனை வேண்டினார்கள்.

அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: தாங்கள் மார்க்கத்தை ஒப்புக் கொண்டவர்களுக்கு நன்மையை விரும்பக்கூடியவர்களாகவும், பரிவுமிக்கவராவும் உள்ளீர்கள். எனவே தாங்கள் எந்த கருத்தை பொது மக்களுக்கு பயனளிக்கக்கூடியதாக கருதுவீர்களோ அதன்படி செயல்படுவதற்கு உறுதியாக உடன்படிக்கை எடுக்கவும். ஏனென்றால் தங்களைப் பற்றி தப்பெண்ணம் கொள்ள முடியாது. அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பற்றி தப்பெண்ணம் கொள்ள முடியாது என்று அன்னார் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் தல்ஹா, ஹஸ்ரத் சுபைர், ஹஸ்ரத் சஅத், ஹஸ்ரத் அபூ உபைதா, ஹஸ்ரத் சயீத் பின் ஸைது மற்றும் அந்த சபையில் இருந்த முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் சஹாபிகள் அனைவரும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் உண்மையை கூறியுள்ளார் என்று கூறினார்கள்.

தாங்கள் எதை உகந்ததாக கருதுகின்றீர்களோ அதை செய்து கொள்ளுங்கள். நாங்கள் உங்களை எதிர்க்க மாட்டோம். மேலும் தங்கள் மீது எந்த வகையிலும் குற்றஞ்சாட்ட மாட்டோம் என்றும் கூறினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பேசினார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களுக்கு மத்தியில் எழுந்து நின்றார்கள். மேலும் அல்லாஹ்வை நினைவு கூர்ந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதினார்கள். பின்னர் மக்களே! அல்லாஹ் உங்கள் மீது இஸ்லாத்தின் மூலமாக அருள் செய்துள்ளான். ஜிஹாதின் மூலமாக உங்களுக்கு கண்ணியம் வழங்கியுள்ளான். மேலும் இந்த மார்க்கத்தின் மூலமாக மற்ற அனைத்து மார்க்கங்களின் மீதும் உங்களுக்கு மேன்மையை வழங்கியுள்ளான். எனவே அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் சிரியா நாட்டில் ரோமானியர்களுடன் சண்டையிடுவதற்காக போருக்கு ஆயத்தமாகுங்கள் என்று கூறினார்கள்.

(தாரீக் திமஷ்க்... தொகுதி 1 பாகம் 2 பக்கம் 46 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருர் அஹ்யாஅத் தராஸூல் அரபியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அவ்ஃபான் பின் சயீத் அவர்களுக்குப் பிறகு யாரை பஹ்ரைன் நாட்டின் கவர்னராக ஆக்கி அனுப்பி வைப்பது என்பது பற்றி தனது தோழர்களுடன் ஆலோசனை செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்வான் அவர்கள் யாரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பஹ்ரைன்வாசிகளுக்கு கவர்னராக நியமித்தார்களோ, மேலும் யார் பஹ்ரைன்வாசிகள் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கும் காரணியாக இருக்கின்றாரோ மேலும் எவர் அந்த மக்களையும், அந்த பகுதியையும் நன்கு அறிந்தவராக இருக்கின்றாரோ அந்த நபரை அனுப்பி வையுங்கள் என்று கூறினார்கள். அந்த நபர் அல்லாமா பின் ஹஸ்ரமி ஆவார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அல்லாமா பின் ஹஸ்ரமி அவர்களை பஹ்ரைனுக்கு அனுப்புகின்ற கருத்தை ஏற்றுக கொண்டார்கள்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 3 பக்கம் 248 அறிவிப்பு எண் 14089 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருர் அஹ்யாஅத் தராஸூல் அரபியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஒரு முறை மழை பொழியவில்லை. மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தனர். மேலும் வானம் மழை பொழிவதில்லை. பூமியில் விளைச்சல் இல்லை. மக்கள் கடும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர் என்று கூறினர். அதற்கு நீங்கள் செல்லுங்கள். பொறுமையை கையாளுங்கள். மாலைக்குள் அல்லாஹ் உங்களின் கஷ்டங்களை நீக்கி விடுவான் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். இதற்கிடையே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் 100 ஒட்டகங்களைக் கொண்ட வணிகக் குழு சிரியாவிலிருந்து கோதுமை அல்லது உணவுப் பொருட்களை எடுத்துக் கொண்டு மதீனா வந்தடைந்தது. இந்த செய்தியை கேட்டு மக்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டு வாசலுக்கு சென்றனர். மேலும் கதவைத் தட்டினர். நீங்கள் என்ன விரும்புகின்றீர்கள்? என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு வறட்சி காலம் ஏற்பட்டுள்ளது. வானம் மழை பொழியவில்லை. பூமியில் விளைச்சல் இல்லை. மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர் என்பதை தாங்கள் அறிவீர்களா? என்று மக்கள் கேட்டனர்.

தங்களிடம் உணவு தானியங்கள் இருப்பதாக நாங்கள் அறிகின்றோம். அதனை தாங்கள் எங்களிடம் விற்று விடுங்கள். ஏனெனில் நாங்கள் அதனை ஏழை எளியவர்களுக்கு கொண்டு சேர்த்து விடுவோம் என்று கூறினர். அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மிகவும் நல்லது. உள்ளே வாருங்கள். உள்ளே வந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். வியாபாரிகள் அன்னாரின் வீட்டிற்குள் நுழைந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டினுள் தானியம் இருப்பதைக் கண்டார்கள்.

மேலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வியாபாரிகளிடம் இவ்வாறு கூறினார்கள்: நான் சிரியா நாட்டிலிருந்து இந்த பொருட்களை வாங்கியுள்ளேன். மேலும் அதனை இங்கு கொண்டு வந்துள்ளேன். நான் வாங்கிய விலையிலிருந்து நீங்கள் எவ்வளவு லாபம் கொடுப்பீர்கள் என்றும் கேட்டார்கள். நாங்கள் 10ற்கு 12 தருகின்றோம் என்று அவர்கள் கூறினர். அதாவது அதன் விலை 10 திர்ஹம் என்றால் நாங்கள் 12 திர்ஹம் கொடுக்கின்றோம் என்றனர். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எனக்கு இதை விட அதிகமாக கிடைக்கும் என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் 10ற்கு 15 தருகின்றோம் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எனக்கு இதை விட அதிகமாக கிடைக்கின்றது என்று கூறினார்கள். அதற்கு அபூஅம்ர் அவர்களே! மதீனாவில் எங்களைத் தவிர்த்து வேறு எந்த வியாபாரியும் இல்லை. அவ்வாறிருக்க இதை விட தங்களுக்கு யார் அதிகமாக கொடுப்பார் என்று வியாபாரிகள் கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஒவ்வொரு திர்ஹமிற்கு பகரமாகவும், பத்து மடங்கு எனக்கு அல்லாஹ் அதிகம் தருவான். நீங்கள் அதை விட அதிகம் தர முடியுமா? என்று கேட்டார்கள். இல்லை எங்களால் இதை விட அதிகமாக தர முடியாது என்று அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி)

அவர்கள் நான் அல்லாஹ்வை சாட்சியாக வைத்து இந்த தானியங்களை முஸ்லிம் ஏழைகளுக்கு தருமம் செய்கின்றேன். அதாவது இந்த அனைத்து தானியங்களையும் ஏழைகளுக்கு கொடுக்கின்றேன். இதற்கு எந்த விலையையும் நான் பெற மாட்டேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த நாளன்று இந்த சம்பவம் நிகழ்ந்ததோ, தானியங்கள் சதகாவாக கொடுக்கப்பட்டதோ அந்த நாள் இரவில் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கனவில் கண்டேன். அன்னார் அரேபியாவைச் சாராத ஒரு குதிரையின் மீது அமர்ந்திருந்தார்கள். அன்னார் ஒளிமயமாக இருந்தார்கள். அன்னாரின் பாதங்களில் ஒளியால் ஆன காலணிகள் இருந்தன. கைகளில் ஒளியால் ஆன தடி இருந்தது. அன்னார் அவசரத்தில் இருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் தங்களையும், தங்களுடன் பேசுவதையும் விரும்பக்கூடியவனாக இருக்கின்றேன். தாங்கள் இவ்வளவு விரைவாக எங்கு செல்கின்றீர்கள்? என்று கேட்டேன். அதற்கு இப்னு அப்பாஸே! உஸ்மான் ஒரு சதகா கொடுத்திருக்கின்றார். அல்லாஹ் அதனை ஒப்புக் கொண்டு விட்டான். சொர்க்கத்தில் அவரது திருமணம் நடைபெறுகின்றது. அவரது திருமணத்தில் கலந்து கொள்வதற்கு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சீரத் அமீருல் மூமினீன் பக்கம் 51,52 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஆற்றிய பணிகள் மற்றும் அன்னாருக்கு இருந்த அந்தஸ்து தொடர்பாக சில விஷயங்களை எடுத்துரைக்கின்றேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக ஆனபோது அன்னார் பெரிய சஹாபிகளுடன் பைத்துல் மால் மூலமாக வழங்கப்படும் உதவித் தொகை பற்றி ஆலோசனை செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் உண்ணுங்கள்; உண்ணக் கொடுங்கள்.

(சீரத் அமீருல் மூமினீன் பக்கம் 53 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபத்தில் அச்சிடப்பட்டது)

தங்களின் தேவைகளையும் முழுமை செய்து கொள்ளுங்கள். மக்களின் தேவைகளையும் முழுமை செய்யுங்கள் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

நிர்ணயிப்பதற்கு எந்த அவசியமும் இல்லை. இஸ்லாமிய வெற்றிகளின் தொடர் பரந்துபட்டது. ஏராளமான செல்வங்கள் வரத் தொடங்கின. அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த செல்வங்கள் தொடர்பாக ஆலோசனை செய்வதற்கு சில சஹாபிகளை ஒன்று கூட்டினார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் செல்வம் அதிகமாகி விட்டதையும், மக்களுக்கு போதுமானதாக இருப்பதையும் நான் காண்கின்றேன். மக்களின் புள்ளிவிவரங்களை ஒன்றுதிரட்ட வேண்டும். ஏனென்றால் எவர் உதவி பெற்றுள்ளார்; எவர் பெறவில்லை என்பது அதன் மூலம் தெரிய வரும். அவ்வாறு செய்யவில்லை என்றால் நமக்கு சிக்கல்கள் தோன்றலாம் என எனக்கு அச்சம் உள்ளது. சிலர் இரண்டு இரண்டு முறை வாங்கிச் செல்லலாம். முறையான ஏற்பாடு இருக்க வேண்டும். கணக்குப் புத்தகங்கள் உருவாக்கப்பட வேண்டும். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தி மக்களின் பெயர்களை பதிவு செய்து பணி செய்யப்பட்டது.

(சீரத் அமீருல் மூமினீன் பக்கம் 54 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபத்தில் அச்சிடப்பட்டது)

மேலும் முறையாக அந்த கணக்கின் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் உதவித் தொகை கிடைக்கத் தொடங்கியது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பும் உள்ளது. முன்னரும் கூறப்பட்டுள்ளது. அது ஆடை அணிவது மற்றும் நயவஞ்சகர்கள் ஆடையை கழற்றுவதற்கு முயற்சி செய்வது என்று சைகையாக கூறப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நாள் கூறினார்கள்: உங்களில் யாராவது கனவு கண்டீர்களா? என்று கேட்டார்கள். ஒரு நபர் நான் கண்டேன் என்று கூறினார். ஒரு தராசு விண்ணிலிருந்து இறங்கியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எடை போடப்பட்டார்கள். தாங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விட அதிக எடை கொண்டவராக இருந்தீர்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எடை போடப்பட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எடை அதிகம் கொண்டவராக இருந்தார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோர் எடை போடப்பட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகுந்த எடை கொண்டவராக இருந்தார்கள். பின்னர் தராசு திரும்பப் பெறப்பட்டது. அப்போது நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தில் விருப்பமின்மையை கண்டோம். அன்னார் இந்த கனவின் மீது மகிழ்ச்சியை வெளிப்படுத்தவில்லை. மாறாக, மிகுந்த விருப்பமின்மையை வெளிப்படுத்தினார்கள்.

(சுனன் அபீ தாவூது, கிதாபுஸ் சுன்னா... ஹதீஸ் எண் 4634)

ஓர் அறிவிப்பு இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இன்று இரவு ஒரு நல்லடியார் கனவில் காட்டப்பட்டார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடனும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடனும் இணைக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து எழுந்து வந்து விட்டோம். நல்லடியார் என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆவார்கள். மேலும் சிலர் சிலருடன் இணைக்கப்படுவது என்பது அவர்கள் மார்க்கத்தின் பணியாளர்களாக இருப்பார்கள். அல்லாஹ் எந்த மார்க்கத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அனுப்பினானோ அந்த மார்க்கத்தின் பணியாளராக அவர்கள் இருப்பார்கள்.

(சுனன் அபீ தாவூது, கிதாபுஸ் சுன்னா... ஹதீஸ் எண் 4636)

ஹஸ்ரத் ஸம்ரா பின் ஹன்தப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் கனவில் பார்த்தேன் என்று ஒரு நபர் கூறினார். அதாவது விண்ணிலிருந்து ஒரு பாணை தொங்கிக் கொண்டிருக்கின்றது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். அதன் இரு புறங்களையும் பிடித்து அதிலிருந்து சிறிது தண்ணீர் அருந்தினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வருகை தந்து அவர்களும் இரு பக்கங்களையும் பிடித்து போதுமான அளவிற்கு தண்ணீர் அருந்தினார்கள். பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வந்தார்கள். அதன் இரு புறங்களையும் பிடித்து போதுமான அளவிற்கு தண்ணீர் அருந்தினார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் வந்தார்கள். அதன் இரு புறங்களையும் பிடித்தார்கள். அப்போது அது வழுகி விட்டது. அதிலிருந்து சிறிது பகுதி அன்னார் மீதும் சிந்தி விட்டது.

(சுனன் அபீ தாவூது, கிதாபுஸ் சுன்னா... ஹதீஸ் எண் 4637)

இதில் கிலாஃபத்தின் வரிசைக் கிரமம் பற்றி சைகை உள்ளது. மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடன் முழு காலகட்டமும் நிகழ்ந்த கடினங்களை சைகையாக கொண்டதாக இருந்தது. சரியான முறையில் தண்ணீர் அருந்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பது இதனையே சுட்டிக் காட்டுகின்றது.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் தேர்ந்தெடுப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த ஆலோசனை சபை பற்றி ஹஸ்ரத் முஸவ்விர் பின் முக்ரிமா அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் தன் மீது நடந்த தாக்குதலுக்குப் பிறகு அன்னாரிடம் மீண்டும் மீண்டும் நீங்கள் யாரையாவது கலீஃபாவாக நியமனம் செய்து விடுங்கள் என்று கூறப்பட்டது. ஆனால் அன்னார் மறுத்து விட்டார்கள். ஒரு நாள் அன்னார் மேடைக்கு வருகை தந்தார்கள். சில வார்த்தைகளை கூறினார்கள். பின்னர் நான் மரணித்து விட்டால் உங்களின் விவகாரம் இந்த ஆறு நபர்களின் பொறுப்பில் இருக்கும். அவர்கள் யார் என்றால், அவர்கள் அனைவர் மீதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருப்தி கொண்ட நிலையிலேயே அவர்களை விட்டு பிரிந்து சென்றார்கள். அலி பின் அபீ தாலிப், சுபைர் பின் அவாம், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், உஸ்மான் பின் அஃப்வான், தல்ஹா பின் உபைதுல்லாஹ் மற்றும் சஅத் பின் மாலிக் ஆகியோர் ஆவர். எச்சரிக்கை! நான் உங்கள் அனைவருக்கும் முடிவெடுக்கும்போது அல்லாஹ்வின் அச்சத்தை மேற்கொள்வதற்கும், நீதியை மேற்கொள்வதற்கும் கட்டளையிடுகின்றேன் என்று அன்னார் கூறினார்கள்.

அபூ ஜாஃபர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் கிலாஃபத் தேர்தலுக்காக ஏற்படுத்தப்பட்ட ஆலோசனை குழுவினருடன் இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் உங்களது விவகாரத்தை உங்களுக்குள் ஆலோசனை செய்து கொள்ளுங்கள். இரண்டு பக்கமும்

இரண்டு இரண்டு ஓட்டுகள் இருந்தால் பின்னர் மீண்டும் ஆலோசனை செய்யுங்கள். நான்கு மற்றும் இரண்டு ஓட்டுகள் இருந்தால் பின்னர் எவருக்கு அதிக ஓட்டு இருக்குமோ அவரை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

ஸைது பின் அஸ்லம் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இரண்டு புறமும் மூன்று, மூன்று ஓட்டுகள் இருந்தால் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் எந்தப் பக்கம் இருப்பார்களோ அந்த மக்களின் கூற்றை கேட்க வேண்டும். மேலும் அவருக்கு கட்டுப்பட வேண்டும்.

அப்துர் ரஹ்மான் பின் ஸைத் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காயமுற்றபோது அன்னார் இவ்வாறு கூறினார்கள்: ஷுஹைபே! நீர் மூன்று நாட்கள் வரை மக்களுக்கு தொழுகை நடத்த வேண்டும். அதாவது ஷுஹைபை இமாமுஸ் ஸலாத்தாக அன்னார் நியமனம் செய்தார்கள். பின்னர் கூறினார்கள்: நீங்கள் கிலாஃபத் தொடர்பான தங்களது விவகாரத்தில் ஆலோசனை செய்து கொள்ளுங்கள். இந்த விவகாரம் 6 நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எவர் எதிர்ப்பு தெரிவிப்பாரோ அவரின் கழுத்தை வெட்டி விடுங்கள்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது மரணத்திற்கு சற்று முன்பு ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களுக்கு தூதுச் செய்தி அனுப்பினார்கள். மேலும் அபூ தல்ஹாவே! உமது சமுதாயத்தில் 50 நபர்களை அழைத்துக் கொண்டு ஆலோசனைக் குழு உறுப்பினர்களிடம் செல்லுங்கள். அவர்கள் 3 நாட்களுக்குள் தங்களில் ஒருவரை அமீராக தேர்ந்தெடுக்கும் வரை நீர் அவர்களை விட்டு விலகக்கூடாது. அல்லாஹ்வே! நீ அவர்கள் மீது எனது பிரதிநிதி ஆவாய் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

இஸ்ஹாக் பின் அப்தில்லாஹ் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் தனது தோழர்களுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கபர் தயாராகும் வரையிலும், அதன் பிறகு ஆலோசனைக் குழுவினருடனும் இருந்தார்கள். பின்னர் அந்த ஆலோசனைக் குழு தனது விவகாரத்தை ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களிடம் ஒப்படைத்தபோது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் தமது வீட்டின் வாசலில் இருந்தார்கள். ஆலோசனைக்குழுவானது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் யாரை விரும்புவாரோ அவரை அமீராக நியமித்துக் கொள்ளலாம் என்று தனது விவகாரத்தை ஒப்படைத்திருந்தது. எனவே ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களிடம் பைஅத் செய்யும் வரை அவர்களுடன் இருந்தார்கள்.

ஹஸ்ரத் சல்மா பின் அபீ சல்மா தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள். முதன் முதலில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பைஅத் செய்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான உமர் பின் உமைரா அவர்கள் தமது பாட்டனாரிடமிருந்து அறிவிக்கின்றார்கள். முதல் முதலில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்ததை நான் கண்டேன். அதன் பிறகு மக்கள் ஒவ்வொருவராக அன்னாரிடம் பைஅத் செய்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 34,35 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாஅத் தராஸுல் அரபியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தனது இறுதி நோயின்போது தனக்குப் பிறகு வர இருந்த கலீஃபாவிற்கு செய்த அறிவுரை மற்றும் ஆலோசனைக் குழு தொடர்பாக சஹீஹ் புகாரியில் விளக்கமாக கூறப்பட்டுள்ளது. அது பற்றிய குறிப்பு நமக்கு இவ்வாறு கிடைக்கின்றது. அமீருல் மூமினீன் அவர்களே! தாங்கள் ஒருவரை கலீஃபாவாக நியமனம் செய்து விடுங்கள் என்று மக்கள் வேண்டினர். அதற்கு இந்த கிலாஃபத்திற்கு உரிமை படைத்தவராக இந்த சில நபர்களைத் தவிர்த்து வேறு எவருக்கும் உரிமை இருப்பதாக எனக்கு தெரியவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது அன்னார் அவர்களின் மீது திருப்தி கொண்டிருந்தார்கள். மேலும் அன்னார் ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சஅத் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ஆகியோரின் பெயரை நினைவு கூர்ந்தார்கள். மேலும் அப்துல்லாஹ் பின் உமர் உங்களுடன் இருப்பார். ஆனால் இந்த கிலாஃபத்தில் அவருக்கு எந்த உரிமையும் கிடையாது என்று கூறினார்கள்.

இதனை முன்னரும் நான் அறிவிப்புகளில் எடுத்துக் கூறியுள்ளேன். எனவே இங்கு சுருக்கமாக கூறுகின்றேன். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்ட பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குறிப்பிட்டிருந்த அந்த நபர்கள் ஒன்றுகூடினர். பின்னர் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் நீங்கள் உங்களது விவகாரத்தை உங்களிடமுள்ள மூன்று நபர்களிடம் ஒப்படைத்து விடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் நான் எனது அதிகாரத்தை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கின்றேன் என்றும், ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் நான் எனது உரிமையை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கின்றேன் எனவும், ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் நான் எனது உரிமையை ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கின்றேன் என்றும் கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் உங்கள் இருவரில் எவர் ஒருவர் இந்த விவகாரத்திலிருந்து விலகி விடுவாரோ நாங்கள் அவரிடமே இதனை ஒப்படைத்து விடுவோம். இஸ்லாம் மற்றும் அந்த நபரின் கண்காணிப்பாளனாக அல்லாஹ் இருப்பான் என்று கூறினார்கள். அதாவது கிலாஃபத் தேர்ந்தெடுப்பு விவகாரம் அவரிடம் ஒப்படைக்கப்படும். அவர்களில் எவர் சிறந்தவரோ அவரே தேர்ந்தெடுக்கப்படுவார். இந்த விவகாரத்தில் இரண்டு சான்றோர்களும் அமைதி காத்தனர். பின்னர் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் தாங்கள் இந்த விவகாரத்தை என்னிடத்தில் ஒப்படைக்கின்றீர்களா? என்று கேட்டார்கள். மேலும் அல்லாஹ் எனது கண்காணிப்பாளனாக இருக்கின்றான். உங்களில் எவர் சிறந்தவரோ அவரை தேர்ந்தெடுப்பது தொடர்பாக நான் எந்த குறைவும் செய்ய மாட்டேன் என்று கூறினார்கள். எனவே என்னிடம் ஒப்படைத்து விடுங்கள் என்று கூறினார்கள்.

தற்போது இந்த குழுவின் தலைமைப் பொறுப்பு என்னிடம் வந்து விடும். முதலில் அவர்களில் இருவரும் ஒருவரை தலைவராக்கிக் கொள்வோம் என்று கூறினர். அவர்கள் விலகவில்லை. எனவே நான் விலகிக் கொள்கின்றேன். மேலும் அதன் தலைமைத்துவம் இவ்வாறு இருக்கும் என்றும் கூறினார்கள். எவ்வாறிருப்பினும் நான் நீதியின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவேன். அல்லாஹ் எனது கண்காணிப்பாளனாக இருக்கின்றான் என்று அன்னார் கூறினார்கள். அப்போது அவர்கள் இருவரும் நல்லது என்று கூறினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள், அவர்கள் இருவரில் ஒருவரின் கரத்தைப் பிடித்து தனியாக இழுத்துச் சென்றார்கள். மேலும் அவரிடம் தங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உறவு ரீதியிலான பந்தம் இருக்கின்றது. இஸ்லாத்தில் தங்களுக்குள்ள அந்தஸ்தை தாங்கள் அறிவீர்கள் என்றும் கூறினார்கள். அல்லாஹ் தங்களின் கண்காணிப்பாளனாக இருக்கின்றான். நான் தங்களை அமீராக்கி விட்டால் நீங்கள் நிச்சயம் நீதம் செய்வீர்களா? நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை அமீராக ஆக்கி விட்டால் நீங்கள் அவரது கூற்றை செவிமடுப்பீர்களா? என்று கேட்டார்கள். அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கரத்தை பிடித்தவாறு நீங்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கட்டளைகளை ஏற்றுக் கொள்வீர்களா? என்று கேட்டார்கள்.

பின்னர் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் இரண்டாவது நபரை தனியாக அழைத்துச் சென்றார்கள். அதாவது இப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் முறை வந்தது. அன்னாரிடமும் அதே விஷயங்களை கூறினார்கள். அவர்கள் உறுதியான உறுதிமொழி பெற்ற பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் தாங்கள் உங்களது கரங்களை நீட்டுங்கள் என்று கூறினார்கள். பின்னர் அன்னாரிடம் அவர்கள் பைஅத் செய்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் அன்னாரிடம் பைஅத் செய்தார்கள். பின்னர் வீட்டில் உள்ளவர்கள் உள்ளே வந்தார்கள். அவர்களும் அன்னாரிடம் பைஅத் செய்து விட்டார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்)... ஹதீஸ் எண் 3700)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணம் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டது தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காயமுற்றார்கள். அப்போது தமக்கு இறுதி நேரம் நெருங்கி விட்டது என்பதை உணர்ந்து கொண்டார்கள். அப்போது அன்னார் 6 நபர்கள் தொடர்பாக வஸிய்யத் செய்தார்கள். அவர்கள்

தங்களுக்குள் ஒருவரை கலீஃபாவாக நியமித்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். அந்த 6 நபர்கள் இவர்கள் ஆவர். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், ஹஸ்ரத் சஅத் பின் வக்காஸ் (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அத்துடன் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்களையும் அந்த ஆலோசனையில் பங்கு பெறுவதற்காக நியமனம் செய்தார்கள். ஆனால் அவருக்கு கிலாஃபத்தில் உரிமை இல்லை என்றும் கூறியிருந்தார்கள். மேலும் இந்த மக்கள் அனைவரும் 3 நாட்களில் முடிவெடுக்க வேண்டும் என்றும் அந்த மூன்று நாட்கள் வரை ஷுஹைப் அவர்களை இமாமுஸ் ஸலாத்தாக நியமித்து வஸிய்யத் செய்தார்கள். ஆலோசனையின் கண்காணிப்பு பொறுப்பை மிக்தாத் பின் அஸ்வத் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். மேலும் அவர்கள் அனைவரையும் ஓரிடத்தில் ஒன்றுதிரட்டி முடிவெடுக்க நிர்பந்திக்க வேண்டும் என்றும் வழிகாட்டினார்கள். மேலும் அவர்கள் சுயமே வாள் ஏந்திக் கொண்டு வாசலுக்கு வெளியே பாதுகாப்பு பணி கொடுக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்கள். எவரை பெரும்பான்மையான நபர்கள் ஒப்புக் கொள்வார்களோ அவரிடம் அனைத்து மக்களும் பைஅத் செய்ய வேண்டும் என்றும், எவர் மறுத்து விடுவாரோ அவரை கொலை செய்து விட வேண்டும் என்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறியிருந்தார்கள்.

ஒருவேளை இரண்டு தரப்பிலும் மூன்று, மூன்று ஓட்டுகள் இருக்குமென்றால் அந்நிலையில் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் யாரை கலீஃபாவாக நியமிக்க ஆலோசனை வழங்குவாரோ அவர் கலீஃபாவாக இருப்பார். இந்த தீர்ப்பின் மீது அவர்கள் திருப்தி கொள்ளவில்லை என்றால் பின்னர் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் எவரை கூறுகின்றார்களோ அவர் கலீஃபாவாக இருப்பார். ஐந்து நபர்கள் ஆலோசனை செய்தனர். ஏனெனில் அந்நேரத்தில் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் மதீனாவில் இருக்கவில்லை. எனினும் எந்த முடிவும் எட்டப்படவில்லை. மிகவும் நீண்ட விவாதத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் (ரலி), எவர் தனது பெயரை திரும்ப பெற விரும்புகிறாரோ அவர் கூறட்டும் என்று கூறினார்கள். அப்போது அனைவரும் மௌனமாக இருந்தனர். எனவே ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் எல்லாரையும் விட நான் முதலில் எனது பெயரை திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் நானும் எனது பெயரை திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்று கூறினார்கள். பின்னர் மீதமுள்ள இருவரும் கூறினர். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மௌனமாக இருந்தார்கள். இறுதியில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள், அவர்கள் அனைவரிடமும் ஒரு உறுதிமொழி பெற்றார்கள். மேலும் நான் தீர்ப்பு வழங்குவதில் எந்த சலுகையும் வழங்க மாட்டேன் என்று கூறினார்கள். அனைத்து பணிகளும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அதாவது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் மூன்று நாட்கள் மதீனாவின் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்றார்கள். மேலும் ஆண்களிடமும், பெண்களிடமும் யாருடைய கிலாஃபத்திற்கு ஆதரவாக அவர்களின் கருத்து உள்ளது என்பதை கேட்டறிந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத்தை ஒப்புக் கொள்கின்றோம் என்று அனைவரும் கூறினர். எனவே அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு ஆதரவாக தமது தீர்ப்பை வழங்கினார்கள். மேலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கலீஃபாவாக ஆனார்கள்.

(கிலாஃபத்தே ராஷிதா, அன்வாருல் உலூம் தொகுதி 15 பக்கம் 484,485)

அல்லாமா இப்னு சஅத் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் பின் அத்ஃபான் அவர்களிடம் ஹிஜ்ரி 23ஆம் ஆண்டு துல்ஹஜ் 29 அன்று திங்கட்கிழமை பைஅத் செய்யப்பட்டது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது எஞ்சிய மக்களில் எல்லாரையும் விட சிறந்த நபரை நாம் தேர்ந்தெடுத்திருக்கின்றோம் என்று ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும் இந்த தேர்ந்தெடுப்பில் நாம் எந்த தவறும் இழைக்கவில்லை என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கிலாஃபத் அரியணையில் அமர்ந்த பிறகு ஆற்றிய முதல் சொற்பொழிவு பற்றி அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. இஸ்மாயீல் பின் இப்ராஹீம் பின் அப்துர் ரஹ்மான் பின் அப்தில்லாஹ் பின் அபீ ரபீஆ மஹ்ரூமி தனது தந்தையிடமிருந்து இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்யப்பட்டபோது அன்னார் மக்களிடம் வருகை தந்தார்கள். மேலும் அவர்களிடையே உரை நிகழ்த்தினார்கள். அன்னார் அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனது தூய்மையை எடுத்துரைத்த பிறகு கூறினார்கள்: மக்களே! முதலில் செய்யப்படுகின்ற பணி கடினமாக இருக்கும். அதாவது புதிதாக ஒருவர் ஒரு பணியை முதல் முறையாக செய்கின்றபோது அவருக்கு கஷ்டம் இருக்கும். இன்றைக்கு பிறகு இன்னும் நாட்கள் வர இருக்கின்றன. நான் உயிருடன் இருந்தால் உங்களுக்கு முன்னால் என்னால் நல்ல சொற்பொழிவும் ஆற்ற முடியும். இன்று நான் சுருக்கமாக பேசுகின்றேன். எதிர்வரும் நாட்களில் உங்களிடம் உகந்த விஷயங்களை நான் பேசுவேன். பின்னர் நான் ஒன்றும் பேச்சாளர் கிடையாது. ஆயினும் அல்லாஹ் நமக்கு கற்றுத் தந்து விடுவான். சொற்பொழிவாற்றுவதற்குரிய வழிமுறைகளையும் கற்றுத் தந்து விடுவான்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 35 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாஅத் தராஸுல் அரபியில் அச்சிடப்பட்டது)

பத்ர் பின் உஸ்மான் அவர்கள் தமது சிறிய தந்தையாரிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஆலோசனைக் குழுவினர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு அன்னார் இந்த நிலையில் வெளியே வருகை தந்தார்கள். அதாவது அவர்கள் அனைவரிலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மிகவும் வேதனைமிக்கவராக இருந்தார்கள். பின்னர் அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொற்பொழிவு மேடை மீது ஏறி நின்றார்கள். மேலும் மக்களிடம் உரையாற்றினார்கள். மேலும் அன்னார் அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனது தூய்மையை எடுத்துரைத்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதினார்கள். பின்னர் கூறினார்கள்: நீங்கள் விட்டுச் செல்ல இருக்கின்ற ஒரு வீட்டில் இருக்கின்றீர்கள். அதாவது இந்த உலகை நீங்கள் விட்டுச் செல்ல வேண்டும். நீங்கள் வாழ்வின் இறுதிப் பகுதியில் இருக்கின்றீர்கள். எனவே மரணத்திற்கு முன்பாக எந்த அளவிற்கு நன்மைகள் செய்ய முடியுமோ செய்து கொள்ளுங்கள். நிச்சயமாக மரணம் உங்களை சூழ்ந்து கொள்ளும். மேலும் அந்த எதிரி காலையில் அல்லது மாலையில் உங்கள் மீது தாக்கதல் தொடுக்கக் கூடியவனாக இருக்கின்றான். எச்சரிக்கை! நிச்சயமாக உலகம் ஏமாற்றுதலுக்குரிய வழியாகும். எனவே உங்களுக்கு உலக வாழ்க்கை ஏமாற்றுதலுக்கு உள்ளாகி விட வேண்டாம். மேலும் அல்லாஹ்வைக் குறித்து பெரிய ஏமாற்றுக்காரனான ஷய்த்தான் உங்களை ஒருபோதும் ஏமாற்றத்திற்கு ஆளாக்கி விட வேண்டாம். வாழ்ந்து சென்ற மனிதர்களிடமிருந்து படிப்பினை பெற்றுக் கொள்ளுங்கள். பின்னர் முழுமையாக முயற்சி செய்யுங்கள். கவனமற்றவராக இருக்காதீர்கள். ஏனெனில் அல்லாஹ் உங்களிடமிருந்து கவனமற்றவனாக இல்லை. பூமியை கிழித்து அதை வசிப்பிடமாக்கிய உலகவாதிகளும் அவர்களின் சகோதரர்களும் எங்கே சென்றார்கள்?. ஒரு நீண்ட காலம் இதிலிருந்து அவர்கள் பயனடைந்து வந்தார்கள். இறைவன் அவர்கள் இந்த பூமியிலிருந்து அவர்களை வெளியே வீசிவிடவில்லையா? எனவே நீங்களும் அல்லாஹ் வீசிய இடத்திற்கு உலகை வீசி விடுங்கள். மேலும் மறுமையை வேண்டுங்கள். மறுமையை வேண்டுங்கள். ஏனென்றால் அல்லாஹ் மறுமை குறித்து மிகச் சிறந்த உதாரணத்தை கூறியுள்ளான்.

وَ اضْرِبْ لَهُمْ مَّثَلَ الْحَيٰوةِ الدُّنْيَا كَمَآءٍ اَنْزَلْنٰهُ مِنَ السَّمَآءِ فَاخْتَلَطَ بِهٖ
نَبَاتُ الْاَرْضِ فَاَصْبَحَ هَشِيْمًا تَذْرُوْهُ الرِّيٰحُ وَكَانَ اللّٰهُ عَلٰى كُلِّ شَیْءٍ مُّقْتَدِرًا۔ اَلْمَالُ وَ
الْبَنُوْنَ زِيْنَةُ الْحَيٰوةِ الدُّنْيَا وَ الْبٰقِيٰتُ الصّٰلِحٰتُ خَيْرٌ عِنْدَ رَبِّكَ ثَوَابًا وَّخَيْرٌ اَمَلًا

இது அல் கஹஃப் அதிகாரத்தின் வசனங்களாகும். அவர்களுக்கு முன்னால் உலகின் உதாரணத்தை எடுத்துக் கூறுவீராக. அது வானத்திலிருந்து நாம் பொழிந்த தண்ணீரைப் போன்றதாகும். மேலும் அத்துடன் பூமியின் விளைச்சலும் பங்கு பெற்றது. அது மிகவும் வளர்ந்து கதிர் விட்டது. அதனை காற்று சிதறடித்துக் கொண்டு சென்றது. அல்லாஹ் எல்லாவற்றின் மீது முழுமையான ஆற்றல் பெற்றவன் ஆவான். செல்வம் மற்றும் பிள்ளைகள் உலக வாழ்க்கையின் அலங்காரப் பொருட்கள் ஆகும். நிலைபெறக்கூடியது நன்மைகள் ஆகும். அது உமது இறைவனின் பார்வையில் நற்கூலிகளில் மிகச் சிறந்ததாகும். நம்பிக்கையின் அடிப்படையிலும் அது மிகச் சிறந்ததாகும்.இதன் பிறகு மக்கள் அன்னாரிடம் பைஅத் செய்வதற்காக முந்திக் கொண்டார்கள்.

(தாரீக் திப்ரீ தொகுதி 5 பக்கம் 87 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் கிடைத்த வெற்றிகளைப் பற்றியும் நான் குறிப்பிடுகின்றேன். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் கீழ்க்கண்ட பகுதியில்

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 18-25 March 2021 Issue No. 11 & 12

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றிகளை வழங்கியிருந்தான்:

ஆஃப்ரிக்கா, அல்ஜீரியா, மராகஸ் ஆகிய பகுதிகள். ஸ்பெயின் ஹிஜ்ரி 27ஆம் ஆண்டு வெற்றி கொள்ளப்பட்டது. கபரஸ், ஸைபிரஸ் ஹிஜ்ரி 28ஆம் ஆண்டும், திபிரிஸ்தான் ஹிஜ்ரி 30ஆம் ஆண்டும், சவாரி, அர்மீனியா ஹிஜ்ரி 31ஆம் ஆண்டும், ரோம் ஹிஜ்ரி 31 ஆம் ஆண்டும் வெற்றி கொள்ளப்பட்டது.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் இந்தியாவிற்கு இஸ்லாம் வருகை தந்திருந்தது. இந்த திட்டங்கள் மற்றும் வெற்றிகளின் சுருக்கமான விவரம் இதுவாகும்: ஹிஜ்ரி 27 ஆம் ஆண்டு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ சரா அவர்களை 10000 படை வீரர்களுடன் ஆஃப்ரிக்காவிற்கு அனுப்பி வைத்தார்கள். ஆஃப்ரிக்கா என்பதன் பொருள் மராகஸ் மற்றும் அல்ஜீரியாவின் பகுதிகளாகும். ஆக அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான்.

(தாரீக் திப்ரீ தொகுதி 2 பக்கம் 625 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரி 27 ஆம் ஆண்டு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் நாஃபீ பின் ஹுஸைன் சஹ்ரி மற்றும் அப்துல்லாஹ் பின் நாஃபி பின் அப்தே கைப் ஆகியோரை ஆஃப்ரிக்காவிலிருந்து ஸ்பெயினை நோக்கி முன்னேறிச் செல்லுமாறு கட்டளையிட்டார்கள். எனவே அவர்கள் ஸ்பெயினை நோக்கி சென்றார்கள். எனவே அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான். இந்தப் போரில் சஹாபிகளில் ஹஸ்ரத் அபூதர் கஃப்ஃபாரி, ஹஸ்ரத் உபாதா பின் சாமத் மற்றும் அன்னாரின் துணைவியார் உம்மே ஹராம் பின்த் முல்ஹா, ஹஸ்ரத் மிக்தாத், ஹஸ்ரத் அபூதர்தா, ஹஸ்ரத் ஷதாத் பின் அவ்ஃப் ஆகியோர் பங்கு பெற்றிருந்தனர்.

(அல்பதாயா வன்னஹாயா.... தொகுதி 7 பக்கம் 147,148 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

கப்ரஸ் ஹிஜ்ரி 28 ஆம் ஆண்டு வெற்றி கொள்ளப்பட்டது. கப்ரஸ் நாடு என்பது சிரியாவிலிருந்து மேற்குப் பகுதியிலுள்ள ஒரு தனி தீவு ஆகும். அதில் தோட்டங்களும், சுரங்கங்களும் மிகுதியாக இருந்தன. கப்ரஸ் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் அன்னாரின் அனுமதியுடனும், கட்டளையுடனும் அமீர் முஆவியாவின் கையால் வெற்றி கொள்ளப்பட்டது. இந்தப் போரில் ஹஸ்ரத் உம்மே ஹராம் பின் முல்ஹான் அவர்களும் பங்கு பெற்றிருந்தார்கள். அன்னாரின் ஷஹாதத் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்கனவே செய்தி வழங்கியிருந்தார்கள். இந்தப் போரிலிருந்து திரும்பி வருவதற்காக அன்னாருக்கு சவாரி கொண்டு வரப்பட்டது. அன்னார் அதில் ஏறி அமர்ந்தார்கள். ஆனால் அதிலிருந்து கீழே விழுந்து விட்டார்கள். அன்னாரின் கழுத்து எலும்பு முறிந்து போனது. அதனால் அன்னாரின் ஷஹாதத் நிகழ்ந்தது.

(தாரீக் திப்ரி தொகுதி 5 பக்கம் 96 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

தற்போது இந்த நற்குறிப்பு தொடர்கின்றது. எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும் இன்ஷா அல்லாஹ்.

துஆவின் பக்கம் இன்றும் நான் கவனமூட்ட விரும்புகின்றேன். பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காக துஆ செய்து கொண்டிருங்கள். அல்லாஹ் அவர்களின் நிலைமைகளை சிறந்ததாக ஆக்குவானாக. பாகிஸ்தானில் வசிக்கக்கூடிய அஹ்மதிகளுக்கும் துஆக்களுக்கான நற்பாக்கியத்தை அல்லாஹ் வழங்குவானாக. மேலும் தங்களை சீர் செய்து கொள்வதற்கும் நற்பாக்கியத்தை வழங்குவானாக. அல்லாஹ்வுடன் தொடர்பை அதிகரித்துக் கொள்வதற்கும் நற்பாக்கியத்தை வழங்குவானாக. அல்லாஹ் விரைவாக இந்த இருளின் நாட்களை ஒளிமயமாக மாற்றுவானாக. மேலும் நாம் அங்குள்ள அஹ்மதிகளை சுதந்திரத்துடன் தமது கடமைகளை ஆற்றக் கூடியவர்களாக காண்போமாக.

(தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

**மனிதனுக்கு கிடைக்கக்கூடிய அழிவில்லா இன்பமும் ஆபத்தான நேரங்களில் அவனைக் காப்பாற்றி விடுகின்ற விஷயமும் என்னவென்றால், அது இறைவனின் மீதான நம்பிக்கையாகும்**

**இறைவன் மீது நம்பிக்கை**

இறைவன் மீது மனிதனுக்கு நம்பிக்கை ஏற்படுகின்றது. இது இஸ்லாத்தின் சிறப்பம்சமாகும். தான தருமங்கள் மற்றும் துஆவின் மீது நம்பிக்கை உடையவரே முஸ்லிம் ஆவார். கிறிஸ்துவர்களுக்கு இந்த விஷயத்தின் மீது நம்பிக்கை இல்லை. ஏனென்றால் அவர்கள் பௌதீக இறைவனை உருவாக்கிக் கொண்டுள்ளார்கள். மனிதனுக்கு கிடைக்கக்கூடிய அழிவில்லா இன்பமும் ஆபத்தான நேரங்களில் அவனைக் காப்பாற்றி விடுகின்ற விஷயமும் என்னவென்றால் அது இறைவனின் மீதான நம்பிக்கையாகும். இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என்று இஸ்லாம் மட்டுமே போதிக்கின்றது.

**தாய்க்கு தொண்டு**

மனிதனின் நற்பாக்கியத்திற்கான முதல் நிலை என்னவென்றால், அவன் தனது தாயை மதிக்க வேண்டும். ஓவெஸ் குர்னீ (ரலி) அவர்களுக்காக சில சமயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யமன் நாட்டை நோக்கி முகத்தை திருப்பியவாறு, எனக்கு யமன் நாட்டிலிருந்து இறைவனின் நறுமணம் வருகிறது என்று கூறி வந்தார்கள். மேலும் அவர் தனது தாயாருக்கு கட்டுப்படுவதில் மிகவும் மும்முரமாக இருக்கின்றார். அதன் காரணமாகவே அவர் என்னிடம் வரவில்லை என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி வந்தார்கள்.

வெளிப்படையில் இது எப்படிப்பட்ட விஷயம் என்றால், இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் அவரால் அந்த தூதரை சந்திக்க வர முடியவில்லை. தனது தாய்க்கு தொண்டாற்றுவதிலும், கட்டுப்படுவதிலும் முழுமையாக மும்முரமாக இருந்ததன் காரணமாக அவரால் வர முடியவில்லை. ஆனால் நான் காண்கின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரண்டு நபர்களுக்கு 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்ற சிறப்பை வஸிய்யத் செய்திருக்கின்றார்கள். ஒன்று ஓவெஸ் (ரலி) அவர்களுக்கு மற்றொன்று (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட) மஸீஹ் (அலை) அவர்களுக்கு. இது எப்படிப்பட்ட ஓர் ஆச்சரியமான விஷயம் என்றால், இந்த சிறப்பு மற்ற மக்களுக்கு கிடைக்கவில்லை.

ஓரிடத்தில் எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரை சந்திப்பதற்காக சென்றபோது ஓவைஸ் (ரலி) அவர்கள் நான் எனது தாயாருக்கு தொண்டாற்றுவதில் மும்முரமாக இருக்கின்றேன். மேலும் எனது ஒட்டகங்களை வானவர்கள் மேய்க்கின்றார்கள் என்று கூறினார்கள்.

ஆக இந்த மக்கள் தாயாருக்கு தொண்டாற்றுவதற்கு இந்த அளவுக்கு முயற்சி செய்துள்ளார்கள். பின்னர் இவர்கள் ஒப்புக் கொள்ளப்பட்டார்கள். கண்ணியமும் பெற்றார்கள். மற்றொரு வகையான மக்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஒரு பைசாவிற்காக வழக்குகள் தொடுக்கின்றார்கள். மேலும் தாயாரின் பெயரை எந்த அளவுக்கு இழிவாக நினைவு கூறுகின்றார்கள் என்றால் நலிந்த சமுதாயத்தினரும் கூட அப்படி நினைவு கூறுவதில்லை.

எமது போதனை என்ன? அல்லாஹ் மற்றும் அல்லாஹ்வின் தூதரின் வழிகாட்டுதல்களை எடுத்துரைப்பது மட்டுமே ஆகும். ஒருவர் என்னுடன் வெளிப்படையான தொடர்பு வைத்துக் கொண்டு அதனை அவர் ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை என்றால் அவர் ஏன் நமது ஜமாஅத்தில் சேர்ந்திருக்கின்றார்? அதுபோன்ற முன்னுதாரணங்கள் மூலமாக மற்றவர்களுக்கு தடுமாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மக்கள் தாய் தந்தையரைக் கூட கண்ணியப்படுத்துவதில்லை என்று அவர்கள் ஆட்சேபனை செய்கின்றார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 269–270 – 2018 ஆண்டு காதியான் பதிப்பு)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad